₹10

fmpb

# அறைகூவல்

Volume 51 | Issue 8 | August 2021





# ஆரம்ப வரிகள்...

## சுதந்திரதினம், நமது சுவிசேஷதினம்!

இந்தியர்களாகிய நாம் பிரிட்டீஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற ஆகஸ்டு 15-ம் தேதியை ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரதினமாகக் கொண்டாடி வருகிறோம். அந்நாள் நமது சுதந்திர தேசத்தின் பிறந்த நாள்; இந்தியர்களாகிய நாம் சுதந்திரக்காற்றை சுவாசிக்கத் துவங்கிய நன்னாள். எனவே, இந்நாளில் நமது தேசத்திற்குச் சுதந்திரம் பெற்றுத்தந்த ஒவ்வொருவரையும் நாம் சுதந்திர பக்தியோடு நினைவுகூர்ந்து, தேவனுக்கு நன்றி செலுத்துவது சாலச்சிறந்தது. அதுபோல நமது தேசத்தின் சுதந்திரத்திற்குத் தங்களது பங்களிப்பை நல்கிய கிறிஸ்தவர்களைக் குறித்தும் நாம் அவசியம் பெருமிதம் கொள்ள வேண்டும். சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் இந்திய மக்கள்தொகையில் வெறும் 2.3 சதவீதமாகக் காணப்படும் கிறிஸ்தவர்கள், நமது தேசத்தின் சுதந்திரத்திற்கும் கட்டமைப்பிற்கும் மேம்பாட்டிற்கும் தங்களது பங்கைப் பெருமளவில் அளித்துள்ளார்கள் என்பது சரித்திரப்பூர்வமான உண்மையாகும்.

தேசம், அரசியல் மற்றும் ஜனநாயகம் சார்ந்த சுதந்திரம் சிறந்ததாயினும், முழுமையான சுதந்திரம் - கிறிஸ்துவிலும், அவருடைய ஆளுகையிலும்தான் காணப்படுகிறது என்பதே யாவரும் அறியவேண்டிய நிதர்சனம். இது அல்லாமல் உலகிலுள்ள எந்த தேசங்களும், நமது பாரத தேசமும் முழுமையான சுதந்திரத்தை நமக்கு நல்க முடியாது. நாம் நமது தேசத்தை நேசிக்கிறோம்; அதில் நம்பிக்கை கொள்கிறோம். ஆயினும், இந்தியன் என்ற நமது தேசபக்தி கிறிஸ்துவின் ஆட்சிக்குட்பட்டதாக இருக்க வேண்டும். உண்மையான சுதந்திரம் மிகவும் விலையேறப்பெற்றதாகும். ஆம், கிறிஸ்து நமது மீட்பிற்காக மரித்ததினால், நாம் நமது பாவங்களிலிருந்து பெறும் சுதந்திரம் அளவிடப்பட முடியாதது; அது எக்காலத்திற்கும் உரிய முழுமையான மெய்யான சுதந்திரமாகும். "ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவான் 8:36).

நாம் எல்லோரும் சகலவித அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட்டுச் சுதந்திரமாக, சுபீட்சமாக வாழ்க்கையை முழுமையாக முறையாக அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நம்மைக் காயப்படுத்திய, சேதப்படுத்திய நமது சிந்தனைகள் மற்றும் பிறருடைய நடக்கைகள் போன்ற எல்லாவற்றிலிருந்தும் இயேசுகிறிஸ்து நம்மை விடுவிக்க விரும்புகிறார். இதில் கிறிஸ்துவின் நோக்கமென்னவெனில், நம்மை **அவரைப்போலாக்குவதுதான்**. ஏனென்றால் அப்பொழுதுதான் நாம் பிதாவின் சித்தத்திற்குட்பட்டு, நமது அன்றாடக வாழ்வின் சவால்களை மேற்கொள்ள எல்லாப் பயத்திலிருந்தும் கவலையிலிருந்தும் விடுபட்டுப் பாதுகாப்பு மிகுந்தவர்களாகவும், மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்தவர்களாகவும், இவ்வுலகில் ஒரு உண்மையான சுதந்திர வாழ்வு வாழுகிறவர்களாகவும் காணப்படுவோம். இதுதான் ஒரு முழுமை யான சுதந்திரமாகும்! இவ்வாறு கிறிஸ்துவில் நாம் கண்டடையும் இச்சுதந்திரமே - தேசம், இனம், நிறம், மதம், சமூக அந்தஸ்து, கல்வி, பொருளாதாரம் ஆகிய வேறுபாடுகளைக் களைந்து, எல்லா மக்களுடனும் அன்பிலும் நீதியிலும் நம்மை ஒன்றிணைக்கும்.

நாம் நமது இந்திய தேசத்தின் 75-வது ஆண்டு சுதந்திரதினத்தைக் கொண்டாடுகிற இம்மாதத்தில், மார்ட்டின் லூத்தருடைய "கிறிஸ்தவரின் சுதந்திரம்" என்கிற அறிக்கை நமக்குக் கோடிட்டுக்காட்டுவது என்னவெனில், 'கிறிஸ்தவர்கள் வேறுயாதொரு ஆளுகைக்கும் உட்படாத முற்றிலும் சுதந்திரமான தேவஆளுகைக்குட்பட்டவர்கள்; அதேசமயம் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் ஊழியஞ்செய்ய கடமைப்பட்டவர்களும்கூட என்பதே.' இந்த லூத்தரின் வார்த்தைகளை ஏற்கனவே பவுல் அப்போஸ்தலன் கலாத்தியர் 5:13-ல் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கலாம். "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்." எனவே, தேவப்பிள்ளைகளாகிய நாம் இவ்வாலோசனைகளைக் கருத்தில்கொண்டு, கிறிஸ்துவில் உண்மையான முழுசுதந்திரத்தை எவ்வாறு காணலாம் என்பதை நமது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் வாயிலாகப் பிறருக்கு நற்சாட்சியுடன் விளக்கிக்காட்டி, நமது தேசத்தின் சுதந்திரதினத்தை நல் சுவிசேஷதினமாகவும் ஆசரிக்கலாமே!

- **JJ. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

**"இயேசுவைச் சேர்ந்தவர்கள், அவரோடு தேசத்தையும் அன்போடு தழுவிக்கொள்வார்கள்." - ஜாண் பைபர்**

**"தேவனும், வேதாகமமும் இல்லாமல் ஒரு தேசத்தைச் சரியாக ஆட்சி செய்வது சாத்தியமில்லை." - ஜார்ஜ் வாஷிங்டன்**

**"கிறிஸ்தவம் தேசத்தோடு சிறந்த நட்புடன் இருப்பதற்குக் காரணம், கிறிஸ்தவம்தான் மக்களின் மனதை நல்ல மாற்றத்திற்கு உட்படுத்துகிறது." - தாமஸ் ஜெஃபர்சன்**

**"பிளவுப்பட்ட நமது தேசத்தில் நல்லிணக்கத்துடன் வாழுங்கள்." - சாம் கமலேசன்**

**சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல். அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். (கலா.5:13)**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**

# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுகாரியதரிசியிடமிருந்து...



கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றும் பணியில் எனது அன்பு உடன்பங்குதாரர்களே,

நமது இரட்சகரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள ஈடுஇணையற்ற நாமத்தினாலே உங்களனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்!

## எதிர்ப்பின் மத்தியிலும் பணியில் கவனம் செலுத்திய நெகேமியா:

நெகேமியா எருசலேம் அலங்கத்தைக் கட்டிக்கொண்டிருந்தபோது, அவர் ஏளனம், பொய்யான குற்றச்சாட்டு, அச்சுறுத்தல் மற்றும் தனது பெயருக்கு களங்கம் வருதல் போன்ற பல்வேறு எதிர்ப்புகளை எதிர்கொண்டார் என்பதை நெகேமியாவின் புத்தகம் 4 முதல் 6 அத்தியாயங்களில் காணலாம். அப்போது, எதிரியின் ஆயுதங்களை மழுங்கடிப்பதற்கான அவரது முக்கிய ஆயுதம் ஜெபமாகக் காணப்பட்டது (நெகே.4:4-5). சன்பல்லாத் யூதரைச் சக்கந்தம் பண்ணியபோதும் (நெகே.4:1), அம்மோனியரான தொபியா, நெகேமியா கட்டுகிற அலங்கம் 'ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்துபோகும்' என்றபோதும் (நெகே.4:3), நெகேமியாவின் ஜெபம், 'எங்கள் தேவனே, நாங்கள் அவமதிக்கப்படுகிறதைக் கேளும்' என்பதாக மட்டும் அமைந்தது. அதாவது, எதிரிகளுக்கு நேரடியாக பதிலளிப்பதற்குப் பதிலாக, நெகேமியா ஜெபத்தில் தேவனிடம் சென்று அவருக்கு முன்பாக மன்றாடினார். இவைகளின் மத்தியிலும், அவர் அலங்கத்தைக் கட்டுவதற்கான தனது தரிசனத்தை இழந்து போகவுமில்லை; தன்முன்னால் வைக்கப்பட்டிருந்த பொறுப்புகளிலிருந்து தனது கவனத்தைச் சிறிதும் சிதறவிடவுமில்லை. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை நமது தேசமெங்கும் பரவச்செய்வதற்கான நமது தரிசனத்தை நாம் நிறைவேற்ற முயற்சிக்கையில், பல தடைகளும் விரோதங்களும் வரலாம். அந்த எல்லாச் சவால்களையும் நாம் ஜெபத்தில் தேவனுக்குத் தெரியப்படுத்துவதோடு, இந்தியாவின் கடைசி மனிதன் கல்வாரிமேட்டில் ஏறும்வரை நமது தரிசனத்தை நாம் சற்றும் இழக்காதிருக்க வேண்டுமென நெகேமியா இதன்மூலம் நமக்குக் கற்றுத்தருகிறார்.

## பணித்தள திருச்சபைகளின் தன்னிறைவு:

நமது பணித்தளங்களிலுள்ள இளம் திருச்சபைகளும் ஆராதனைக்குழுக்களும் தன்னிறைவு அடைவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன. நமது மண்டல மற்றும் பிராந்தியச் செயலாளர்கள்-மிஷனெரிகளின் உதவியுடன் நமது திருச்சபைகள் நிதித்தேவையிலும், நிர்வாகத்திலும், ஊழியத்திலும் தன்னிறைவு பெற்றவைகளாகுவதற்கான அனைத்துத் திட்டங்களையும், யுக்திகளையும் உருவாக்கி வருகிறார்கள். சந்தால் - சாகிப்கஞ்ச் பிராந்தியத்திலுள்ள நமது அனைத்துத் திருச்சபைகளும் கடந்த ஏப்ரல் 2021 முதல் தங்கள் சுதேச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் அனைத்துத் தேவைகளையும் தாங்களாகவே சந்தித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

## செயலியைப் (APP) பயன்படுத்தி காணிக்கை சேகரிப்பு செய்வதை அதிகரித்தல்:

கடந்த செப்டம்பர் 2020-ல் நமது நன்கொடையாளர்களின் தியாகமான காணிக்கை விவரங்களைப் பதிவுச்செய்ய மொபைல் செயலியை அறிமுகப்படுத்தினோம். இதனால் நமது ஊழியத்திற்கென வரும் காணிக்கை விவரங்களை எளிதாகவும், துல்லியமாகவும் கையாள முடியும். மேலும், இது நமது ஜெபக் குழுத்தலைவர்களின் வேலைப்பளுவைக் குறைப்பதாகவும் அமையும். இப்புதிய முறையை நடைமுறைப்படுத்திக் கொள்ள ஆரம்பத்தில் சற்றுச் சிரமங்கள் காணப்படலாம். ஆனாலும் நமது முதல் நடவடிக்கையாக, நமது ஊழிய ஆதரவாளர்கள் அனைவரையும் இந்த மொபைல் செயலியைப் பயன்படுத்த ஊக்குவிப்பது மிகவும் அவசியமாகிறது. தேவஒத்தாசையால், தமிழ்நாட்டில் 341 ஜெபக்குழுக்கள் இதுவரை இந்த மொபைல் செயலியைப் பயன்படுத்தி வருகின்றன. இதனால்

பயனடையும் நமது ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் சந்தாதாரர்களின் அறிக்கைகள் நமக்கு மிகவும் ஊக்கத்தைத் தருகின்றன. இம்முறையைப் பயன்படுத்துவதால், நமது சந்தாதாரர்கள் தாங்கள் கொடுக்கிற காணிக்கைகளுக்கான ரசீதை உடனுக்குடன் பெறுகின்றனர். ஆயினும், நாம் நமது சந்தாதாரர்களை இதில் இணைப்பதற்கான வேகம் எதிர்பார்த்த அளவில் காணப்படாததால், இந்த மொபைல் செயலியின் பயன்பாட்டை இதுவரை சுமார் 6600 நபர்கள் மட்டுமே பயன்படுத்துவது அதிகம் கவலையளிப்பதாக இருக்கிறது. எனவே, தேவநாம மகிமைக்காக இந்தச் செயல்முறையை விரைவுப்படுத்துமாறு அனைத்து ஜெபக்குழுத்தலைவர்களையும், விரிவுப்பணிச்செயலாளர்களையும் பட்சமுடன் கேட்டுக்கொள்கிறேன். நமது ஊழியத்திற்கு நன்கொடை கொடுப்போர் தங்கள் நன்கொடைகளை நமது இயக்கத்திற்கு நேரடியாக அனுப்புவதற்காக இந்த மொபைல் செயலியில் அதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தேசிய மிஷனெரிப்பயிற்சி மையத்தின் திட்டங்கள்:

தற்போது உத்தரப்பிரதேசத்திலுள்ள ஜான்சியில் நமது மிஷனெரிப்பயிற்சி மையத்தில் 7 பேர் அடங்கிய குழு மிஷனெரிப்பயிற்சி பெற்று வருகிறார்கள்; அவர்கள் 2021 செப்டம்பரில் நமது பணித்தளத்திற்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். மேலும் இந்த ஆகஸ்டு மாதத்தில் 23 நபர்கள் அடங்கிய அடுத்த குழு, 10 மாத மிஷனெரிப்பயிற்சி பெறுவதற்காக இப்பயிற்சி மையத்திற்கு வந்து சேர்வார்கள். கடந்த ஜுலை மாதத்திலும் மிஷனெரிகளைத் தெரிந்தெடுப்பதற்கான ஒரு நேர்க்காணல் நிகழ்ச்சி நடைபெற்றது. நமது இந்த அனைத்து மிஷனெரிப்பயிற்சியாளர்களும் ஆத்தும பாரத்தினால் நிரப்பப்படவும், மிஷனெரி ஊழியத்தில் வரும் சவால்களை எதிர்கொள்ள அவர்கள் தங்களை இப்பயிற்சி மூலம் நன்கு ஆயத்தப்படுத்திக்கொள்ளவும் நாம் அவர்களுக்காக ஜெபிப்போம்.

## ஜெபக்குழுக்களை நேரடியாக நடத்தும் நாட்களுக்கு மீண்டும் திரும்புதல்:

கடந்த ஜுலை 13-ம் தேதி சென்னையில் நடந்த ஒரு ஜெபக்குழுத்தலைவர்கள் கூடுகையில் கலந்து கொண்டேன். நீண்ட கால கொரோனா ஊரடங்கு மற்றும் கட்டுப்பாடுகளுக்குப் பிறகு ஜெபக்குழுத்தலைவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஜெபங்கள் மற்றும் ஊழியத் தேவைகளைத் திரட்டுவது நிமித்தமாக நமது ஜெபக்குழுத்தலைவர்களிடம் காணப்பட்ட தணியாத தாகத்திற்காக தேவனைத் துதிக்கிறேன். வெகு காலமாக இணையத்தின் மூலம் கூட்டங்களை நடத்தியப்பின்னர், தற்போது நமது ஊழிய ஆதரவாளர்களை நேரடியாக கூட்டி அவர்களை மிஷனெரி தரிசனத்தில் அதிகம் வலுப்படுத்த வேண்டிய காலக்கட்டம் இதுவாகும்.

## பஸ்தி நாள்:

1971-ம் ஆண்டு ஜுலை 23-ம் தேதி நமது இயக்கத்தின் மூலம் வட இந்தியாவிற்கு நமது முதல் மிஷனெரி அருள்திரு. ஹெல்கியா மற்றும் குடும்பத்தினர் உத்தரப்பிரதேசத்திலுள்ள நமது முதல் மிஷனெரிப்பணித்தளமான பஸ்தி மண்ணில் காலடியெடுத்து வைத்தனர். நாம் இயக்கமாக, கடந்த 2021 ஜுலை 23-ம் தேதியோடு நமது 50 ஆண்டுகால வடஇந்திய ஊழியத்தை நிறைவு செய்துள்ளோம். 1971-ம் ஆண்டில் இந்த ஒரு பணித்தளத்திலிருந்து ஆரம்பித்த இந்த அற்பமான ஆரம்பம், 2021-ம் ஆண்டில் 347 பணித்தளங்களாக விரிவடைய தேவன் நமது இயக்கத்தை இம்மட்டும் ஆசீர்வதித்து வழிநடத்தியுள்ளார். தேவனுக்கே மகிமையுண்டாகட்டும்!

## இழக்கக்கொடுத்த குடும்பங்களுக்காகத் தொடர்ந்து ஜெபிப்போம்:

கடந்த காலங்களில் கொரோனா தொற்றுநோயின் 2-வது அலையில் தங்களுக்கு அருமையானவர்களை இழந்த சில குடும்பங்களை நான் சந்தித்தேன். அக்குடும்பங்களின் அங்கத்தினர்களுக்காக நாம் இரக்க ஆசனத்திலிருக்கும் நமது ஆண்டவரிடம் தொடர்ந்து மன்றாடி ஜெபிப்போம்.

உங்களனைவரையும் எங்கள் ஜெபங்களில் தாங்குகிறோம்.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,

**அருள்திரு. S. ஜாண் பெர்லின்**

# தேவனிடம் திரும்புவோம்! தேசத்தைக் கட்டியெழுப்புவோம்!

**“தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையைக் கேள்.” (எரே. 22:29)**



ஆகஸ்டு மாதம் நமது தேசத்தின் சுதந்திரதினத்தை நினைப்பூட்டுகிறது. நமது தேசம் சுதந்திரமடைவதற்காகக் கடுமையாகப் போராடிய நமது இந்தியத் தலைவர்கள், போராளிகள் மற்றும் கடந்த கால இந்திய வெகுஜனங்களைப் பற்றிய எண்ணங்கள் நமது இதயங்களை நிழலிடுகின்றன. இந்தியா சுதந்திரமடைந்து 74 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. நமது தேசத்தை ஒரு மதசார்பற்ற நாடாகப் (Secularism) பிரகடனப்படுத்திய நமது இந்தியத்தலைவர்களை நினைத்து நாம் மிகவும் பெருமைப்படுகிறோம்.

நமது தேசம் 75-வது சுதந்திரதினத்தைக் கொண்டாடுகிறது என்றாலும், இந்திய வெகுஜனம் பல்வேறுத் துறைகளில் மிகவும் பின்தங்கிய நிலைமையிலேயே உள்ளதைக் காணலாம். இன்னும் வறுமை ஒழிக்கப்படவில்லை. ஜனநாயக மதிப்பீடுகள், தனிமனித சுதந்திரம் மற்றும் பெண்களின் விடுதலை போன்ற காரியங்களில் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டியதுள்ளது. ஊழல், கொலை, கற்பழிப்பு, தற்கொலை, அடக்குமுறை, பசி, அடிமைத்தனம், பயங்கரவாதம் மற்றும் மதரீதியான தாக்குதல்கள் நமது தேசத்தில் தலை விரித்தாடுகிறது என்பதை அன்றாடகச் செய்திகள் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. இச்சூழ்நிலையில், நமது தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை நாம் வேதாகமத்தின் வெளிச்சத்தில் தெளிவாகக் காணலாம்.

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் நீதி நியாயமற்றவனாகவும், ஏழைகள் மற்றும் பாமரர்கள் மீது எவ்வித அக்கறை யற்றவனாகவும், குற்றமற்ற இரத்தத்தைச் சிந்துகிறவனாகவும் காணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (2இரா.23:34). அவன் தனது அரண்மனையைக் கட்டி யெழுப்பத் தொழிலாளர்களை வருத்தி வேலை வாங்கி, அவர்களுக்குக் கூலி கொடுக்காதிருந்தான். அதன்விளைவாக, அவன் பதவி நீக்கம் செய்யப்பட்டு, பாபிலோனுக்குச் சிறைகைதியாக அழைத்துச் செல்லப்பட்டான். பின்னர் அவனுடைய குமாரன் யோயாக்கீன் ராஜாவானான் (எரே.22:24). தேவன் அவனையும் எருசலேம் மக்களையும் பார்த்து, “தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையைக் கேள்” (எரே.22:29) என்று கூறி, தம்மிடம் திரும்பும்படி எச்சரிக்கிறார் அதேபோல, தேவன் இன்று இந்தியதேச மக்களாகிய

நம்மையும் பார்த்துத் தம்மிடம் திரும்பும்படி அழைக்கிறார். நாம் அவரிடம் திரும்பும்போது, நமது வாழ்விலும் தேசத்திலும் முழுமையான மகிழ்ச்சியும், அன்பும், அமைதியும் பிறக்கும்; நவபாரதம் உருவாகும்!

## 1. நீதியாய் வாழ்தல் ஒரு தேசத்தை உயர்த்துகிறது: (நீதி.14:34)

பல்வேறுப் பாவங்களாலும், துன்மார்க்கத்தினாலும் தீட்டுப்பட்டிருக்கும் ஒரு தேசத்தை தேவன் ஆசீர்வதிக்க முடியாது. ஆதலால்தான், நினிவே மக்களுக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பிரசங்கிக்க தேவன் யோனாவை அனுப்பினார். நினிவே மக்கள் யோனாவின் எச்சரிப்பைக் கேட்டார்கள். ஆகவே, நினிவேயிலுள்ள சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை இரட்டுடுத்தி சாம்பலிலிருந்து பாவஅறிக்கை செய்தது மட்டுமல்லாமல், ராஜாவும் சிம்மாசனத்தைவிட்டு அவ்வாறாகவே தேவனிடத்தில் திரும்பியதைப் பார்க்கிறோம். அதன்விளைவாக தேவன் நினிவே மீது கொண்டிருந்த கோபத்தை விலக்கினார். நினிவே ஒரு புதிய நினிவே ஆனது. ஆம், இந்தியா தேவனிடம் திரும்பும்போது, அது ஒரு புதிய இந்தியாவாக மாறும். இந்தியக் கிறிஸ்தவர்களின் ஒரு முழுமையான இதயமாற்றம், நமது தேசத்தை மாற்றும். எனவேதான், "நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக்கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்" (யோவேல் 2:13) என்று யோவேல் தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார்.

முதலாம் ஆண்டின் ஆதித்திருச்சபைக் கிறிஸ்தவர்களின் பரிசுத்த ஜீவியம், அக்கால ராஜாக்களையும் மிகவும் ஈர்த்ததைக் காண்கிறோம். அவர்களின் பரிசுத்தம், அன்பு மற்றும் வல்லமையைக் கண்டு அக்கால ராஜாக்கள் மிகவும் வியந்தனர். இன்று தேவன், அப்படிப்பட்ட புதுசிருஷ்டியான வாழ்விற்கு 21-ம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களாகிய நம்மையும் அழைக்கிறார்.

## 2. நியாயம் செய்தல் ஒரு தேசத்தை உயர்த்துகிறது: (நீதி.29:4)

"அநியாயஞ்செய்வது ராஜாக்களுக்கு அருவருப்பு; நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும்" (நீதி.16:12). ஒரு தேசத்தை ஆள அத்தேசத்தின் தலைவர்களுக்கு ஞானம் தேவை. தேவனே ஞானத்தின் மூலமாவார். தேசத்தலைவர்கள் ஞானத்தோடும், நீதியோடும் தேசத்தை ஆளும்போது, தேசம் ஆசீர்வதிக்கப்படுகிறது. சாலொமோன் மிகவும் இளம்வயதில் ராஜாவானபோது, தேசத்தை ஆளுவதற்கு அவன் தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்டதையும், தேவன் அவனுக்கு அதை நல்கியதையும் பார்க்கிறோம் (1இரா.3:5-14). சாலொமோனின் ஆட்சி தேசத்தை ஆவிக்குரிய ரீதியாகவும், பொருளாதார ரீதியாவும், தொழில் ரீதியாகவும் ஒரு புதிய தேசமாக மாற்றியது. சாலொமோன் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்த நாளில், முழங்காலில் நின்று பரலோகத்திற்கு முன்பாகத் தனது கைகளை விரித்து, தேசத்தையும் ஆலயத்தையும் ஆசீர்வதிக்கும்படி தேவனிடத்தில் வேண்டுதல் செய்ததைப் பார்க்கிறோம் (1இரா.8:22-54). அப்பொழுது "கர்த்தர் அவனை நோக்கி: நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக,

அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்" (1 இரா.9:3) என்றார். தேவன் சாலொமோனின் சிம்மாசனத்தை நிலைப்படுத்தி, இஸ்ரவேல் தேசத்தை ஆசீர்வதித்தார். ஒரு புதிய பொற்காலம் தொடங்கியது. அவனது ஆட்சிக்காலத்தில் அனைத்துத் துறைகளிலும் அற்புதமான வளர்ச்சி இருந்ததைக் காண்கிறோம்.

'அடிமைத்தனமில்லாத அமெரிக்க தேசத்தை' ஆபிரகாம் லிங்கன் கனவு கண்டார். அவர் ஜனாதிபதியாக இருந்த போது, நீக்ரோக்கள் விலங்குகளைப் போல நடத்தப்படுவதை அவர் விரும்ப வில்லை. ஆதலால் அவர் ஜெபித்து, சீர்திருத்தத்தைக் கையாண்டு அடிமைத் தனமில்லாத ஒரு புதிய அமெரிக்காவை உருவாக்கினார். அவர் தனது உரையில், அவ்விடுதலையைச் "சுதந்திரத்தின் புதிய பிறப்பு'' என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணியும் தேவனுக்குப் பயந்து, நியாயத்தைக் கைக்கொண்டார். அவர் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தேவவழிகளில் நடந்தார். ஆதலால் அம்மகாராணியின் காலம் பக்திவிருத்திக்கேதுவானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை 'ஓய்வுநாள்' என்பதைப் பிரகடனப்படுத்தி, அன்று தேவனுக்கு ஆராதனை செய்வதை வலியுறுத்தினார். அவருடைய காலத்தில் தான், ஒவ்வொரு வீட்டிலும் 'ஞாயிற்றுக் கிழமை பிரசங்கம் ' பற்றிய விவாதம் ஒரு பொதுவான நடைமுறையாக இருந்தது என்று வரலாறு கூறுகிறது. தேவன் இங்கிலாந்தை ஆசீர்வதித்தார். ஆங்கி லேயர்கள் உலகமெங்கிலும் ஆட்சி செய்தனர். அதோடு அநேக மிஷனெரிகள் இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்திலிருந்து எழுந்து உலகம் முழுவதும் சென்று, தேவராஜ்யத்தைக் கட்டியெழுப்பினார்கள்.

## 3. ஜெபம் பண்ணுதல் ஒரு தேசத்தை உயர்த்துகிறது: (நெகே.1:4)

நெகேமியா, எருசலேம் பாழாய்போனதைக் கேட்டபோது, உட்கார்ந்து அழுது, சிலநாளாகத் துக்கித்து, உபவாசித்து, பரலோகத்தின் தேவனை நோக்கி மன்றாடியதைப் பார்க்கிறோம். பாவ அறிக்கையுடன் கூடிய ஜெபம் ஒரு தேசத்தில் பெருகும்போது, தேசம் கட்டி யெழுப்பப்படும். அழிவின் விளிம்பில் இருக்கும் எத்தேசத்தையும் தேவனால் மாற்ற முடியும். இஸ்ரவேலர்கள் தேவனை விட்டுச் சோரம்போனதினால், அவர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போயினர். எருசலேமின் சுவர்கள் இடிக்கப் பட்டு, இஸ்ரவேலர்கள் மிகவும் துன்பத் திற்கு ஆளாயினர். சூசான் அரண்மனை யிலிருந்த நெகேமியா, அதை அறிந்த வுடன் மிகவும் அழுது, கூக்குரலிட்டு, பல நாட்கள் உபவாசித்தார். இடிந்துபோன எருசலேமின் அலங்கத்தை மீண்டும் கட்டியெழுப்பத் துணிந்தார். மிகவும் தீவிர மாக மக்களை ஒன்றுதிரட்டி, எருசலேமின் அலங்கத்தை மீண்டும் கட்டியெழுப்பினார். சமுதாயத்திலும், ஆலயத்திலும் மலிந்துக் கிடந்த தீமைகளைக் களைந்து, சீர்படுத் தினார். இஸ்ரவேல் மக்களை மீண்டும் தங்களது தேசத்தில் குடியமர்த்தினார். நீதி நியாயங்களை நிலைநாட்டினார் தேவாலய வழிபாட்டை மீட்டெடுத்தார். ஒரு புதிய எருசலேம், தேவநாம மகிமைக்காக அன்று எழுந்து நின்றது.

ஜெர்மனி நாட்டைச் சார்ந்த பேராசிரியர் பிலிப் ஜேக்கப் ஸ்பென்சர் (1635-1705) ஜெர்மனி நாடு முழுவதும் ஜெபக் குழுக்களை நிறுவினார். இது ஜெர்மனி யிலுள்ள தேவாலயங்களில் ஒரு பெரிய எழுப்புதலை உருவாக்கிற்று. அந்த ஜெபக்குழுக்களில் பங்கேற்றவர்கள் மனந்திரும்புதல், பரிசுத்தம் மற்றும்

சுவிசேஷத்தை அறியப்படாத மக்களுக்கு வழங்குதல் போன்றவைகளை வலியுறுத்தி னார்கள். அதன் விளைவாக, சீகன்பால்க் மற்றும் புளூட்சாவ் போன்ற இளம் ஜெர்மானியர்கள் இந்தியாவிற்கு மிஷனெரிகளாக வந்தனர். 'முதல் புராட்டஸ்டன்ட் மிஷன்' என்கிற ஒரு புதிய சகாப்தம் உருவானது! சீகன்பால்கின் முயற்சியால் பெண்களுக்கான முதல் பள்ளி தொடங்கப்பட்டது; முதல் அச்சகம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கல்வி இந்தியர் களை மூடநம்பிக்கைகள் மற்றும் வறுமை, அடிமைத்தனம், பாலியத்திருமணம், சாதி, அறியாமை போன்ற பல்வேறுத் தீயபழக்கவழக்கங்களிலிருந்து மீட்டு, மறுமலர்ச்சியடையச் செய்தது.

அந்தணர் வகுப்பைச் சார்ந்த பண்டித ரமாபாய் (1858-1922) கிறிஸ்துவில் புதுவாழ்வைப் பெற்றார். அதன் விளை வாக, அவர் இந்தியாவில் பெண்களின் கல்வி மற்றும் விடுதலையில் ஒரு முன்னோடியாகவும், சமூக சீர்திருத்தவாதி யாகவும் மாறினார். ஜெபத்துடன்கூடிய அவருடைய புதுசிருஷ்டியான வாழ்க்கை, சமுதாயத்தினாலும் மதத்தினாலும் வெறுக்கப்பட்ட எண்ணற்ற விதவைகளின் வாழ்க்கையில் நம்பிக்கையையும் தைரியத்தையும் கொண்டுவந்ததுமல் லாமல், அநேக விதவைகள் மறுமணத்தின் மூலம் மறுவாழ்வுப் பெறவும் ஏதுவாயிற்று.

ஆம், நீதி நியாயத்தை நிலைநாட்டுவதின் மூலம் தேசத்தில் நாகரிகம், விஞ்ஞானம் மற்றும் நவீன தொழில் நுட்பங்கள் வளர்ச்சியின் பாதையை அடைந் துள்ளன. அதனால் மக்கள் சுபீட்சம் பெற்று வாழ்ந்துள்ளனர். நீதியுள்ள தேசத்தலைவர்களும், தேவப்பிள்ளை களும் சமூகங்களையும், தேசங்களையும் தவறான வழியிலிருந்து சீர்திருத்தி யுள்ளனர். அவர்கள் தேசத்தின் போக்கை வளர்ச்சிக்கான ஒரு புதிய திருப்பத்திற்கு நேராக எடுத்துச்சென்றனர் என்பதையும் காணலாம்.

இந்தியாவில் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியால் மக்கள் சமூக, சமய மற்றும் பாவம், ரோகம், சாபம், மூடநம்பிக்கை, அறியாமை, அடிமைத்தனம், பாலியத் திருமணம், சுரண்டல்கள், சாதி வேறுபாடு, அடக்குமுறை, தீண்டாமை போன்ற தீய பழக்கவழக்கங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவின் நற்செய்தி வெறுமனே மக்களைப் பாவத்தி லிருந்து மட்டும் மீட்காமல், அவர்களின் ஒட்டுமொத்த வாழ்வையே மறுமலர்ச்சி பெறச்செய்கிறது. நவபாரதத்தைக் கட்டியெழுப்ப தேவப்பிள்ளைகளாகிய நாம், நல்மனமாற்றத்துடன் நீதியையும் நியாயத்தையும் கடைபிடித்து, ஜெப சிந்தையுடன் தேவனிடத்திற்குத் திரும்பு வோம். ஆமென்!

**- அருள்திரு. டேவிட் ராஜாசிங்**
FMPB - குஜராத் விரிவுப்பணி

## மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. சாமுவேல் ஜெயக்குமார் அவர்கள், 2021 ஜூன் 25-ம் தேதி தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். சென்னையிலுள்ள போரூரில் முதன் முதலாக இவருடைய வீட்டில் வைத்துதான் நமது ஊழியத்தை ஆரம்பித்தோம். அன்றுதொட்டு இந்நாள்வரை இவருடைய குடும்பம் நமது ஊழியத்தில் காட்டுகின்ற ஈடுபாட்டிற்காக தேவனை அதிகம் துதிக்கிறோம். இவருடைய மனைவி திருமதி. சந்திரகலா மற்றும் இரு மகன்களின் குடும்பங்களையும் நாம் நமது ஜெபத்தில் தாங்கிக்கொள்வோம்.



# கிறிஸ்துவில் புதுவாழ்வைப் பெறும் புலம்பெயரும் மக்கள்!

நமது இந்திய தேசத்தில் சுமார் 6 கோடி புலம்பெயரும் கடைநிலை தொழிலாளர்கள் காணப்படுகிறார்கள் என கணக்கீடுகள் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, தமிழ்நாட்டில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சுமார் 15 இலட்சம் பேரும், சென்னையில் மட்டும் இவர்கள் 5 இலட்சம் பேரும் வாழ்கின்றனர். இவர்களுக்குச் சமூக, சமுதாய மற்றும் அரசியல் ரீதியாக எவ்வித அங்கீகாரமோ, அடையாளமோ இல்லாததால், இவர்களுக்கு மானிய விலையில் உணவு, வீட்டு வசதி, பொது சுகாதார வசதிகள், கல்வி மற்றும் வங்கி சேவைகள் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் பெரிதும் மறுக்கப்படுகின்றன. இவர்கள் பெரும்பாலும் சமூக மற்றும் சட்டப் பாதுகாப்பு இல்லாத மோசமான நிலையில் வேலை செய்கிறார்கள்.

கொரோனா தொற்றுநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த கடந்த 2020 மார்ச் மாதத்தில் நமது மத்திய அரசு தேசிய ஊரடங்கை அமல்படுத்தியபோது தொழிற்சாலைகள் மூடப்பட்டதால், இலட்சக்கணக்கான புலம்பெயர்ந்தோர் தங்களது வேலைகளை இழந்து வாழ்வாதாரமின்றி, உணவு, தண்ணீர் மற்றும் பொது போக்குவரத்து இல்லாததால், நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் தூரம் அவர்கள் தங்களது சொந்த மாநிலங்களை நோக்கி நடைப்பயண மாகவே பயணித்ததால், அநேகர் நோய்வாய்ப்பட்டு இறந்ததையும், சிலர் தற்கொலை செய்ததையும், சிலர் விபத்துக் குள்ளானதையும், சிலர் சட்ட ஒழுங்கு நடவடிக்கைக் குள்ளாகி மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதையும் நாம் நன்கு அறிந் திருக்கிறோம்.

'அந்நியரை உபசரிப்பது' வேதாகமம் வலியுறுத்தும் கிறிஸ்தவ நற்பண்புகளில் ஒன்றாகும். தனிமனித உரிமை தவிர்க்க முடியாததாகையால், புலம்பெயர்ந்த வர்களைப் பராமரிப்பதும் தேவனுடைய பிள்ளைகளின் தவிர்க்க முடியாத கடமை யாகும்.

## வேதாகமத்தில் புலம்பெயர்ந்தவர்கள்

கிறிஸ்தவத்தின் அடிப்படை கோட்பாடு களில், மக்கள் புலம்பெயர்ந்த வேதாகம வரலாற்றுச் சம்பவங்கள் கணிசமாக இடம்பெற்றிருப்பதைக் காணலாம். ஆதாமும் ஏவாளும் தேவக்கட்டளைக்குப் புறம்பாக, விலக்கப்பட்ட கனியைப் புசித்ததினால் தேவனிடம் தண்டனை பெற்று, ஏதேன் தோட்டத்தை விட்டுப் புலம்பெயர்ந்து வேறொரு இடத்தில் குடியேறியதைக் காணலாம் (ஆதி.3:1-24). ஆயினும் ஆதாமின் புலம்பெயர்தலை முன்னிட்டு, பின்பு தேவன் ஆபிரகாமைத் தெரிந்துகொண்டு, அவனை அந்நிய தேசத்தைவிட்டு, வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்

கொள்வதற்கு அழைப்பு விடுத்ததைப் பார்க்கிறோம் (ஆதி.12:1-3). தேவன் தமது அநாதி இரட்சிப்பின் நோக்கத்தை முன்னிட்டு, ஆபிரகாமைப் புலம்பெயர்ந்து கானான் தேசத்திற்குச் செல்ல வழிநடத்தி, அவனையும் அவன் சந்ததியையும் ஆசீர்வதித்ததைக் காணலாம் (ஆதி.12). இதன் அடிப்படையில் ஆதாம் மற்றும் ஆபிரகாமின் புலம்பெயர்வுகள் எதிரும் புதிருமாக அதாவது, ஆதாம் புலம்பெயர்ந்தது சாபமாகவும் ஆபிரகாம் புலம்பெயர்ந்தது ஆசீர்வாதமாகவும் காணப்படுவதை அறியலாம். அதேசமயம் இது உலகளாவிய சிறப்பம்சம் கொண்டதாகவும் இருக்கிறது. எப்படியெனில், ஆபிரகாம் புலம்பெயர்ந்து கானானுக்குச் செல்லும் சம்பவம், உலக அனைத்து மக்களும் பரம கானானுக்கு வழிநடத்தப்பட்டு, தேவனின் நித்திய உறவுக்குள்ளாகி ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற ஆழமான இறைசத்தியத்தை உள்ளடக்கியுள்ளதைக் காணலாம்.

இஸ்ரவேல் மக்கள் தேவன் தங்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின கானான் தேசத்திற்குள் நுழைந்தபோது தேவன் அவர்களுக்குக் கொடுத்த கட்டளைகள், அவர்கள் மத்தியில் அங்கு ஏற்கனவே வாழ்ந்துக் கொண்டிருந்த புலம்பெயர்ந்தவர்களை அடிப்படையாகக் கொண்டதாகும். ஏனெனில் ஒருகாலத்தில் எகிப்தில் புலம்பெயர்ந்த குடிகளாகக் காணப்பட்ட இஸ்ரவேலர்கள், தற்காலம் கானான் தேசத்தில் தங்கள் மத்தியில் அந்நிய மக்களாக வாழுகிற பிறமக்களிடம் அதிகம் அன்பு காட்டவேண்டுமென அக்கட்டளைகளை தேவன் அவர்களுக்குப் பிறப்பித்ததாக அறிகிறோம் (லேவி.19:33-35). இந்தப் புலம்பெயர்ந்த அந்நியர்களாகக் கானானில் இஸ்ரவேல் மக்களின் வீடுகளில் வேலை செய்த ஜனங்கள், நமது தேச மாநிலங்களுக்கிடையே இன்றைய காலத்தில் புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்களை நினைவூட்டுகிறார்கள். "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (மத்.22:39) என்கிற இயேசுவின் இரண்டாவது கற்பனை இதை நமக்கு உணர்த்துகிறது.

## புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் நமது ஊழியம்


அற்பமான ஆரம்பம்

இக்கருத்தின் அடிப்படையில் தென் இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்தோருக்குச் சுவிசேஷம் சென்றடைவதற்கான பாரத்தை தேவன் நமது மிஷனெரிகளான அருள்திரு. தேவதாஸ் மற்றும் அவரது மனைவி திருமதி. ஆஸ்நாத் தேவதாஸ் அவர்களின் மனதில் 2005-ம் ஆண்டு கொடுத்தார். ஒருமுறை இவர்கள் வடஇந்தியாவிலிருந்து தென்இந்தியாவை நோக்கி இரயிலில் பிரயாணப்பட்டு வரும்போது, ஆயிரக்கணக்கான வடஇந்திய மக்கள் தென்இந்தியாவை நோக்கி வேலையினிமித்தமாகத் தங்களோடு பிரயாணப்படுவதைக்கண்ட இவர்கள், அவர்களுக்குச் சுவிசேஷம் உரைத்தனர். அதை அநேகர் மிகவும் வாஞ்சையோடு கேட்டதினால், மீண்டும் அவர்களோடு தொடர்பு கொள்வதற்காக அவர்களின் இருப்பிடத்தைக் கேட்டறிந்து, அடுத்தநாளே அவர்களை இவர்கள் சந்திக்கச் சென்றபோது, அங்கு சுமார் 60 பேர் கூடி இவர்களிடம் சுவிசேஷத்தைக் கேட்டறிந்தனர். அதைத் தொடர்ந்து, நமது மிஷனெரிகளாகிய இவர்கள் புலம்பெயர்ந்தவர்களுக்காக ஜெபிக்கும்போது, தேவன் அவர்கள் மனதில் இருவசனங்களை (பிலிப்பியர் 2:13; ஏசாயா 49:19-20) ஞாபகப்படுத்தினார்.

எனவே தேவனுடைய வழிநடத்துதலின்படி, 2011-ம் ஆண்டு நமது மிஷனெரிகள் முதலில் சென்னையிலுள்ள திருமுடிவாக்கத்தில் புலம்பெயர்ந்தவர்களிடையே

ஊழியத்தைத் தொடங்கினார்கள். இவர்கள் ஊழியத்தின் மூலமாகத் திரு. மாலிக் கர்மகர் என்பவர் முதலாவதாகக் கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, 2011 அக்டோபர் 3-ம் தேதி, தனது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்தார்.



சந்தியா வேளை

இவ்வாறாக, நமது மிஷனெரிகள் சென்னையிலுள்ள புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தொடர்ந்து மிஷனெரிப்பணியாற்றவே, 2012 ஆகஸ்ட் 27-ம் தேதி, இவர்கள் மத்தியில் பிரபலப் பாடகர் திரு. அனில்காந்த் அவர்களைக் கொண்டு நடத்திய நற்செய்தி இன்னிசை கூட்டத்தில் சுமார் 1200 புலம்பெயர்ந்த மக்கள் கலந்துகொண்டது, இவ்வூழியத்தில் ஒரு பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அதேபோல் 2014-ம் ஆண்டு பிரபலப் பாடகர் சகோ. விஜய் பென்டிக்ட் அவர்களைக் கொண்டு நடத்திய இன்னிசை நிகழ்ச்சியும், அம்மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்குப் பெரிய திறந்த வாசலைத் தந்தது. இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திச் சென்னையிலுள்ள மணலி, ரெட்ஹில்ஸ், கத்ரபாக்கம், தண்டலம், அயனம்பாக்கம், கொளத்தூர், கிண்டி, அத்திப்பட்டு மற்றும் கொரட்டூர் ஆகிய பகுதிகளில் வாழுகிற புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் கிரமமாக ஊழியம் செய்து அநேகரைக் கிறிஸ்துவண்டை நடத்த தேவன் நமது மிஷனெரிகளுக்கு உதவி செய்தார்.

## புலம்பெயர்ந்த மக்கள் ஊழியத்தின் ஆசீர்வாதங்கள்

கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோர் நமது ஊழியத்தோடு நெருங்கிய தொடர்பில் காணப்படுகின்றனர்.



வெளிஊழியக்குழு

10 இடங்களில் இவர்களுக்காக வாரந்தோறும் ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்த மக்கள் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர்; குறிப்பாக 191 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். இவர்களில் ஊழிய வாஞ்சையுள்ளவர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு வேதாகமப்பயிற்சிக் கொடுத்து, சுமார் 14 பேர் சுவிசேஷகர்களாக உருவாகியுள்ளனர்; மேலும் 23 பேர் ஊழியப்பயிற்சியைப் பெற்று வருகிறார்கள்.

இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட இப்புலம்பெயர்ந்த மக்கள், மீண்டும் தங்கள் சொந்த ஊர்களுக்கே திரும்பிச் செல்லும்போது, அவர்கள் தங்கள் கிராமங்களில் தேவனுக்கு மகிமையாக வாழ்வதோடு, அங்கே அவர்கள் ஊழியம் செய்யவும் அவர்களை ஊக்குவித்து பின்தொடர் ஊழியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதன்பொருட்டு குறிப்பாக, மூன்று பேர் வங்காளத்திலுள்ள பூரலியா பகுதியிலும், பீஹாரிலுள்ள லக்கிசராய் பகுதியிலும், அஸ்ஸாமிலுள்ள சிவ்சாகர் பகுதியிலும் தங்கள் சொந்த நிலங்களை ஆலயம் கட்டுவதற்கு வழங்கியிருப்பது, அவர்களது ஆவிக்குரிய நல்வளர்ச்சியைக் காட்டுவதாக அமைகிறது.

## புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் சமுதாயப்பணிகள்

புலம்பெயர்ந்த விசுவாசிகளின் குழந்தைகளுக்குச் சென்னை - மணலியிலுள்ள புனித ஜாண் பள்ளி நிறுவனர் திரு. சந்திர போஸ் மூலமாகக் கல்வியைக் கொடுத்து வருகிறோம். கடந்த 2020-ம்



ஊழியப்பயிற்சிப் பெற்ற தன்னார்வலர்கள்



நிவாரணப்பணி

ஆண்டின் ஊரடங்கின்போது, புலம் பெயர்ந்து வாழுகிற குடும்பங்களுக்குப் பள்ளிகரணையில் 180 சிப்பங்களாகவும் தண்டலத்தில் 100 சிப்பங்களாகவும் மளிகைப்பொருட்களை வழங்கவும், புலம் பெயர்ந்தவர்கள் கடந்த ஆண்டுகளில் பெருவெள்ளப்பாதிப்பிற்குட்பட்டபோது, அவர்கள் மத்தியில் வெள்ள நிவாரணப் பணியாற்றி, தேவஅன்பைப் பகிர்ந்து கொள்ளவும் தேவன் வழிநடத்தினார்.

## இலக்கும் தரிசனமும்

தேவஒத்தாசையால், 2022 மார்ச் மாதத் திற்குள் மேலும் 25 இடங்களில் இம்மக்க ளிடையே ஊழியப்பணிகளை நிறுவ ஜெபித்துத் திட்டமிட்டு வருகிறோம். 2022 ஏப்ரல் மாதத்திலிருந்து இவர்களில் ஊழிய சிறப்புப்பயிற்சிப்பெற்ற தன்னார்வ ஊழியர்களைச் சென்னையிலுள்ள பிற மாவட்டங்களுக்கும், தென் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கும் இம்மக்கள் மத்தி யில் ஊழியம் செய்ய அனுப்பத் திட்டமிட்டு ஜெபித்து வருகிறோம்.

## புலம்பெயர்ந்த மக்களுக்கான சிறப்பு ஜெபக்குறிப்புகள்

- ‘இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே கிறிஸ்தேசு இவ்வுல கிற்கு வந்தார்’ என்கிற நற்செய்தி, இப்புலம்பெயர்ந்த மக்கள் அனை வரையும் சென்றடைந்து ஒரு பெரிய தாக்கத்தை உருவாக்க;
- புலம்பெயர்ந்த மக்கள் தங்கள் தனிமைவாழ்விலும் தேவ அன்பையும், ஆறுதலையும், பெலனை யும், ஐக்கியத்தையும் அனுபவிக்க;
- இவர்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்குரிய ஆக்கப்பூர்வமான ஊழிய வழிமுறைகளைக் கண்டுபிடிக்க;
- நமது திருச்சபைகள் இவர்களை அடையாளம் கண்டு, இவர்களுக்கு உதவ முன்வர;
- இவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, இவர்கள் மத்தியில் வருடாந்திர முகாம்கள் பெரியளவில் நடத்தப்பட;
- அநேக வடஇந்திய மொழிகள் பேசும் தன்னார்வ ஊழியர்கள் இத்தரிசனத் தோடு இப்பணியில் தோள்கொடுக்க முன்வர;
- இவர்களுடைய பிள்ளைகள் கல்வி யறிவு பெற்று வாழ்வில் முன்னேற்ற மடைய;
- இவர்களுடைய மருத்துவத்தேவைகள் எவ்விதத் தடையுமின்றி பூர்த்திச் செய்யப் பட;
- இவ்வூழியம் தமிழகம் முழுவதும் மற்றும் அனைத்து மாநிலங்களிலும் விரிவடைய;
- இப்புலம்பெயர்ந்த விசுவாசிகள் தங்களது தொழிற்கூடங்களில் நற்சாட்சியுள்ள ஜீவியம் செய்ய;
- இப்புலம்பெயர்ந்த விசுவாசிகள் மீண்டும் தங்களது சொந்த ஊர்களுக்குத் திரும்பிச்செல்லும்போது. கிறிஸ்தவ சாட்சியாக அங்கே வாழவும், அநேக ருக்குக் கிறிஸ்துவைப் பறைசாற்றவும்;
- வெகுவிரைவில் இவர்கள் தங்கள் சொந்த ஊர்களிலேயே தங்கள் வாழ்வாதாரத் தேவைகளை முழுமை யாகக் கண்டுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

– *தகவல்:* **அருள்திரு. தேவதாஸ் குடும்பம்,** FMPB – புலம்பெயர்ந்தோர்க்கான ஊழியம், சென்னை.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**அருள்திரு. ராஜன் ஆண்ட்ரூஸ்**
(1944 - 2021)

சகோ. ராஜன் ஆண்ட்ரூஸ் அவர்கள், 1944 அக்டோபர் 5-ம் தேதி திரு. சின்னையன் மற்றும் திருமதி. நாகம்மாள் ஆகியோருக்கு மகனாக ஈரோடு மாவட்டத்திலுள்ள பெருந்தலையூர் என்ற கிராமத்தில் பிறந்தார். பெருந்தலையூரில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த எல்.எம்.எஸ் மிஷனெரிகளான ஆண்டனி வாட்சன் புரோ, ஹெர்பர்ட் ஆர்தர் போப்லி மற்றும் எல்லிஸ் ஆகியோர் ஊழியப்பணியாற்றி, மருத்துவம னைகளையும் பள்ளிகளையும் நிறுவியிருந்தனர். அப்பள்ளியில் இவர் பயின்ற காலத்தில் இயேசு கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். தனது பள்ளிப்படிப்பிற்கு பிறகு, சுமார் 18 ஆண்டுகளாக அருகிலுள்ள ஒரு சர்க்கரை ஆலையில் இயந்திர இயக்குனராகப் பணியாற்றி வந்தார். இக்காலக்கட்டத்தில், சகோ. ராஜன் ஆண்ட்ரூஸ் அவர்களுக்குக் கிராஸ் பியரர் எவாஞ்சலிக்கல் குழுவினருடன் தொடர்பு கிடைத்ததால், அவர்களோடு இவரும் இணைந்து வெளிஊழியங்களில் ஈடுபட்டு வந்தார்.

ஒருநாள் சகோ. ராஜன் ஆண்ட்ரூஸ் அவர்கள், பவானி ஆற்றங்கரையில் தனியாக அமர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, பட்டாம்பூச்சி கூட்டமாக ஆற்றின் மேலே பறந்துக் கொண்டிருந்த காட்சி இவரை மிகவும் கவர்ந்தது. அப்போது, திடீரென ஒரு பட்டாம்பூச்சி அந்த ஆற்றுத்தண்ணீரில் விழவே, அதைக் கண்ட மற்றதொரு பட்டாம்பூச்சி அதைச் சாவிலிருந்து மீட்பதற்காகப் பலமுறை பெருமுயற்சி செய்து, கடைசியில் மீட்டெடுக்கவே, அந்த இரு பட்டாம்பூச்சிகளும் சந்தோஷமாகப் பறந்துச் சென்றன. இதைப் பார்த்துக் கொண்டிருந்த இவரோடு தேவஆவியானவர் இடைபட ஆரம்பித்தார். ‘இவ்வாறாகப் பாவத்தில் வீழ்ந்து அழிகிற மாந்தரை மீட்க நீ என் வரக்கூடாது?’ என்ற அழைப்பு இவரது மனதில் கேட்கவே, அன்றே தன்னை முழுநேர ஊழியத்திற்கென ஒப்புக்கொடுத்தார்.

மே 20, 1979 அன்று இவர் ஒரு மிஷனெரியாக நமது இயக்கத்தில் இணைந்தார். நவம்பர் 20,1980-ல் சகோதரி. நிர்மலாவைத் திருமணம் செய்து, பெத்தேல் வேதாகமக்கல்லூரியில் மிஷனெரிப்பயிற்சி பெற்றார். பின்னர் 1981-ம் ஆண்டு FMPB-ன் முதல் பணித்தளமாகிய பெரிய மலையில் மிஷனெரியாகச் சுமார் இரண்டரை ஆண்டுகள் பணியாற்றினார். தேவன் இவர்கள் குடும்ப வாழ்வை ஆசீர்வதித்து, மனோ சாமுவேல் என்கிற மகனையும், பிளெஸி ரெஞ்சிதம் எனும் மகளையும் கிருபையாகக் கொடுத்தார். இவரது மகன் தற்போது தென்கொரியாவில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்; மகள் பட்டய கணக்காளர் (Charted Account) பட்டப்படிப்பு முடித்துள்ளார்.

சகோ. ராஜன் ஆண்ட்ரூஸ் அவர்கள், பின்னர் குடும்பமாக 1983-ம் ஆண்டு முதல் பேரிகையை மையமாக வைத்து, நூற்றுக்கணக்கான மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தினர். அநேக தேவாலயங்களைப் பாந்திகுரி, ஜோதுபோலத்தூர், திம்மச்சத்ரம், பிள்ளைக்கோட்டை, அக்ரஹாரம், கலகவுண்டனூர், அரியூர், மந்தரள்ளி, பெட்டதம் பட்டி, நம்பிப்பட்டி, சுந்தைகைப்பட்டி, ஞானபட்டி, ஜாதையம்பட்டி ஆகிய இடங்களில் கட்டியெழுப்ப தேவன் இவர்களுக்குக் கிருபை செய்தார். பின்னர் இவர்கள் அரூரை மையமாகக் கொண்டு ஏழு ஆண்டுகள் ஊழியம் செய்தார்கள். இவ்வாறாகக் கடந்த சுமார் 30 ஆண்டுகள் அருள்திரு. ராஜன் ஆண்ட்ரூஸ் அவர்கள் குடும்பமாக இம் மிஷனெரிப்பணியை உண்மையும், உத்தமமுமாகச் சிறப்புடன் தேவநாம மகிமைக்காகச் செய்து வந்தார்கள்.

சகோ. ராஜன் ஆண்ட்ரூஸ் அவர்கள் தனது வயோதிபத்தின் நிமித்தமாக, நீண்ட காலங்கள் பெலவீனமாக இருந்து, கடந்த 2021 மே 18-ம் தேதி தனது இவ்வுலக ஓட்டத்தைக் கர்த்தருக்குள் ஓடிமுடித்து இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். இவரது அர்ப்பணிப்புள்ள வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். இவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாரை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

# கர்த்தரின் பணியில் கண்ணியமான கணினியாளர்!



**சகோ. அஜித் தேவராஜ்**
(1974 - 2021)

சகோ. G. அஜித் தேவராஜ் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம் - நாசரேத்தைச் சார்ந்த திரு. P. குருநாத் ராஜசேகரன், மூக்குபேரியைச் சார்ந்த திருமதி. D. மல்லிகா ஆகியோருக்கு இரண்டாவது மகனாக ஏப்ரல் 20-ம் தேதி 1974-ல் பிறந்தார். இவருக்கு உடன்பிறந்த இரு சகோதரர்கள் உண்டு. இவர் சிறுவயதிலிருந்தே தனது பெற்றோர்களால் நல்ல ஆவிக்குரிய பண்புகளில் வளர்க்கப்பட்டார்.

இவர் சேலத்தில் உள்ள IRTEL பொறியியல் கல்லூரியில் B.E., இறுதியாண்டு படிக்கும்போது இவருடைய இரு சிறுநீரகங்களும் செயலிழந்ததினால், 1998-ம் ஆண்டு மார்ச் 17-ம் தேதி இவருடைய தகப்பனாரின் ஒரு சிறுநீரகம் மாற்று அறுவை சிகிட்சையின் மூலம் இவருக்குப் பொருத்தப்பட்டது. இவரை ஊழியத்தின் பாதையில் நடத்தவேண்டும் என்ற இவரது பெற்றோரின் விருப்பப்படி, 1999-ம் ஆண்டு FMPB தலைமைச்செயலக கணினித்துறையில் தன்னார்வ ஊழியராக இணைந்தார்.

கர்த்தரின் சித்தப்படி 2004-ம் ஆண்டு ஜனவரி 19-ம் தேதி, சகோ. அஜித், விஷ்வவாணி ஊழிய நிர்வாக அலுவலகத்தில் முழுநேரப்பணியாளராகச் செயலாற்றி வந்த சகோதரி. கோல்டாவைத் திருமணம் செய்து கொண்டார். தேவன் இவர்களின் இல்லற வாழ்க்கையை ஜடா, எக்லீசியா என்ற இரு பெண் பிள்ளைகளை ஈவாகத் தந்து ஆசீர்வதித்துள்ளார். சகோ. அஜித்தின் தகப்பனார் தான மாகக் கொடுத்த சிறுநீரகம் செயலிழந்த நிலையில், இவரது அருமை மனைவி திருமதி. கோல்டா தன்னுடைய ஒரு சிறுநீரகத்தை 2012-ம் ஆண்டு இவருக்குத் தானமாகக் கொடுத்தார்கள். சகோ. அஜித்தை இதுவரை கர்த்தர் அற்புதமாகவும் ஆச்சரியமாகவும் நடத்திவந்தார். அலுவலகக்காரியங்களையும் குடும்பக்காரியங்களையும் எந்தவிதத் தொய்வுமில்லாமல் உற்சாகத்துடன் செய்ய கர்த்தர் இவருக்குக் கிருபை செய்தார்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில், குறிப்பாகச் சென்னையிலுள்ள தலைமையகத்தில் கணினித்துறையில் (Computer Dept) இவர் ஆற்றியப் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. நமது இயக்கத்தின் பணிகளைச் சிறப்பாகவும், துரிதமாகவும் செய்வதற்கு கணினி நிகழ்வுகளை நிர்வகிப்பதில் இவர் மிக முக்கியப் பங்காற்றினார். கணினி மூலமாக நடக்க வேண்டியப் பணிகளில் எவ்விதத் தொய்வுமின்றி இவர் செயலாற்றினார். இவரிடம் இத்துறையைச் சார்ந்த எவ்வுதவியை நாடினாலும், எவ்வளவு வேலைப்பளு இவருக்கு இருந்தாலும் ‘முடியாது’ என்று கூறாமல், அதைப் புன்முறுவலுடன் நமக்குச் செய்து கொடுத்து வந்தார். இவரது ஊழியச்செயல்பாடுகளில் அறிவாற்றலும், ஆழ்ந்த அர்ப்பணிப்பும், நீடிய பொறுமையும், அன்பும், தியாகமும் ஒருங்கே காணப்பட்டன. இவர் தனது நற்செயல்களால் தலைமைச்செயலகத்தில் பணிபுரிவோர் அனைவராலும் நேசிக்கப்படத்தக்கவராகவும், மதிக்கப்படத்தக்கவராகவும் காணப்பட்டார்.

கடந்த மே மாதம் இவரைக் கொரோனா தொற்றுநோய்ப் பாதித்ததினால், சென்னை MIOT மருத்துவ மனையில் இவர் சிகிட்சைக்காக அனுமதிக்கப்பட்டார். 22 நாட்கள் ICU-ல் சிகிட்சை பெற்றுவந்த நிலையில், சிகிட்சை பலனின்றி, இவர் கடந்த 2021 ஜுன் 14-ம் தேதி காலை 8.30 மணியளவில் இவ்வுலக ஓட்டத்தை முடித்து தேவ ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது அன்பு மனைவி மற்றும் பிள்ளைகள் ஜடா (XII Std), எக்லீசியா (X Std) - வை தேவன்தாமே ஆற்றித்தேற்றி, பெலப்படுத்த நமது ஜெபத்தில் அவர்களைத் தாங்குவோம். ஆவியின் கனியினால் அலங்கரிக்கப்பட்ட இவரது பெயரும், புகழும் வெறும் கல்லறையிலல்ல, எங்கள் அனைத்து ஊழியர்களின் இதயங்களிலும் ஆழமாகப் பொறிக்கப்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது. இவருடைய அழகிய நற்சாட்சியுள்ள வாழ்விற்காகக் கர்த்தரைத் துதிக்கிறோம்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திரு. D.E.A. டேனியல் அவர்கள், கடந்த 23.11.2020 அன்று தனது 69-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் திருச்சி, கோலார்பட்டி பகுதியில் பல வருடங்களாக ஜெபக்குழுத்தலைவராக நமது ஊழியத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். மாதந்தோறும் உண்டியல் காணிக்கைகளைக் கிரமமாகச் சேகரித்து அனுப்பி ஊழியத்தைத் தாங்கியவர். ஊழியர்களிடம் அதிகமாகப் பாசம் காட்டி உபசரிப்பவர். இவரது மனைவி மற்றும் பிள்ளைகளுடைய குடும்பங்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

---



முனைவர். திருமதி. ஹேரிஸ் நவீனா அவர்கள், கடந்த 10.05.2021 அன்று தனது 31-ம் வயதில் தேவராஜ்யம் சேர்ந்தார்கள். இவர் ராசிபுரம் ஜெபக்குழுத்தலைவராகச் செயல்பட்டு வந்தார். இவரது தகப்பனார், திரு. டேனியல் செல்லத்துரை அவர்களும் நமது ஊழியத்தில் ஜெபக்குழுத்தலைவராக ராசிபுரம் தமிழ் பாப்திஸ்து திருச் சபையில் செயல்பட்டு வந்தார்கள். இவர் கடந்த 17.08.2020 அன்று தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். திருமதி. ஷீலா செல்லத்துரையையும் மற்றும் குடும்பத்தினரையும் தேவன் ஆற்றித்தேற்றி, பெலப்படுத்த ஜெபிப்போம்.



---



வேலூர் பணி மாவட்டம், காட்பாடி ஜெபக்குழுத்தலைவராக இருந்த திரு. ஸ்டுவர்ட் இன்பராஜ் அவர்கள், 15 ஆண்டுகளுக்கு மேல் நமது இயக் கத்தின் விரிவாக்கப்பணியில் மிகவும் உதவியவர்கள். அவர்களுக்குப் பின், அதைத் தொடர்ந்து அவரின் அன்பு மகன் சகோ. ஆல்பர்ட் சாலொமோன், நமது ஊழியங்களை மிகவும் நேசித்து, அதிக ஆதரவு தந்து வந்தார்கள். இவர் CSI காட்பாடி தேவாலயத்தின் செயலர் பொறுப்பிலிருந்தும், நமது இயக்கத்தின் முன்னேற்றப்பணி வளர்ச்சிக்கு மிகவும் தோள் கொடுத்தவர். நமது இயக்கத்தின் மூலம் நடைபெறும் அனைத்து கூடுகைகளும் ஆலயத்தில் வைத்து நடத்துவதற்குப் பெரிதும் உதவியவர். இவர் 09.06.2021-ம் தேதியன்று தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். இவரின் வாழ்வுக்காகக் கர்த்தரைத் துதிக்கிறோம். இவரின் அன்புத் தாயார், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளையும் தேவன்தாமே ஆறுதல்படுத்துவாராக!

---



திரு. டேவிட் அண்ணன் அவர்கள், கடந்த 21 வருடங்களாக திண்டுக்கல் மாவட்ட ஸ்கேன் பொறுப்பாளராக நமது இயக்கத்தின் ஊழியத்தில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தவர்கள். காணிக்கைகளைச் சேகரித்தும், தங்களது உதாரத்துவமான காணிக்கைகளோடே மிஷனெரியைத் தாங்கியும் வந்தார்கள். அன்பிற்கும் பொறுமைக்கும் உதாரணமான அண்ணன் அவர்கள், ஜுன் 21-ம் தேதி, 2021 மாலை தனது 54-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவரது அன்பு மனைவி திருமதி. அஜந்தா டேவிட், மூத்த மகள் ஷீபா பிளஸ்சி குடும்பம், மகன் மெல்வின் மோசஸ் ஆகியோரை தேவன்தாமே ஆறுதல்படுத்தி, பெலப்படுத்த நம்முடைய ஜெபத்தினால் தாங்கிக்கொள்வோம்.



திரு. M. இஸ்ரவேல் அண்ணன் அவர்கள், கடந்த 20 ஆண்டுகளாக மார்த்தாண்டம் பணிமாவட்ட கூடுகைகளில் கலந்து கொண்டு, நமது இயக்கத்தின் அனைத்து ஊழியங்களிலும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தார்கள். இவர் மிஷனெரியை ஆதரித்தும், உண்டியல் மூலம் காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பியும், தனது குடும்பத்திலுள்ள அனைவரையும் ஒருங்கிணைத்து ஜெப ஐக்கியத்தை உருவாக்கி ஆத்தும ஆதாய தாகத்தையும் வளர்த்துவந்தார். இவர் கடந்த 10.05.2021 அன்று தனது 66-வது வயதில் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். இவருடைய அன்பு மனைவி, மகள், மகன்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளை தேவன்தாமே ஆறுதல்படுத்தி, பெலப்படுத்த ஜெபிப்போம்.




திரு. எபநேசர் அண்ணன் (வயது - 60) அவர்கள், கடந்த 2011 - ல் சென்னை அண்ணா தங்கம் காலனி -3-ம் பகுதிக்குப் பொறுப்பாளராக இருந்து, அப்பகுதியிலுள்ள மக்களுக்கு நமது இயக்கத்தை அறிமுகப்படுத்தி, அநேக புதிய அங்கத்தினர்களைச் சேர்த்தார்கள். அண்ணா நகர் ஜெபக்குழு மூலமாக நடைபெறுகின்ற சுவிசேஷ ஊழியத்தில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு "தெருப்பிரசங்கம்" மூலமாக நற்செய்தி கூறுவார்கள். இவர் கடந்த 11.05.2021 அன்று "கொரோனா" வியாதியினால் தாக்கப்பட்டு, சிகிட்சை பலனளிக்காமல் கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார். அண்ணன் விட்டுச்சென்றுள்ள அவரது அன்பு மனைவி, பிள்ளைகளைச் சகல ஆறுதலின் தேவன்தாமே பெலப்படுத்த நமது ஜெபத்தில் தாங்குவோம்.



திரு. டேனியல் பால்தாஸ் அவர்கள், 1993-ம் ஆண்டு ஸ்கேன் பணியின் வளர்ச்சிக்கு முழுநேர ஊழியரை இயக்கம் அனுப்பியபோது, ஸ்கேன் பணியின் வளர்ச்சிக்காக 7 பேர் கொண்ட ஒரு குழுவை உருவாக்கியதில் முக்கிய பொறுப்பேற்று செயல்பட்டார்கள். இவர் ஸ்கேன் உண்டியலைப் பயன்படுத்துவதில் குமரி மாவட்ட அளவில் முதன்மையான பங்கை வகித்த முக்கிய நபரும் ஆவார். இவர் கடந்த 11.05.2021 அன்று தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். இவரது மகன் திரு. டெரின் ஜோகிந்தாஸ் அவர்களும் நமது இயக்கப்பணிகளில் மிகவும் கரிசனை உள்ளவர். ஸ்கேன் ஜெபக்கூடுகை நடத்தத் தங்களது மண்டபத்தை இலவசமாகப் பயன்படுத்த உதவியவர்கள். இவரும் தனது தகப்பனார் இறந்த அதே மாதம் 24.05.2021 அன்று தேவமகிமைக்குள் பிரவேசித்தார். இக்குடும்பத்தாரின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.





திரு. பால் ராபின் அண்ணன் அவர்கள், கடந்த 19.05.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் அரியலூர் பகுதி யில் அநேக அங்கத்தினர்களைச் சந்தித்து, காணிக்கைகளைச் சேகரித்து அனுப்புவதை மிகவும் கிரமமாகச் செய்து, அநேகரை இந்த ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தாங்கவும் உற்சாகப்படுத்தி வந்தவர். ஊழியர்களை அதிகமாக நேசித்து அன்பு செலுத்தி உபசரிப்பதில் சிறந்தவர். வட இந்தியாவில் ஒரு ஆலயத்தைத் தனது குடும்பத்தின் சார்பில் கட்டி எழுப்ப உதவியவர். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மனைவி மற்றும் 3 பிள்ளைகளின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம். தேவன்தாமே இவர்களுக்கு ஆறுதல் தந்து பெலப்படுத்துவாராக!



திரு. T. ஜோன்ஸ் டேவிட் அண்ணன் அவர்கள், கடந்த 20 ஆண்டுகளாக மார்த்தாண்டம் பணிமாவட்டத்தில் ஜெபக்குழுத்தலைவராக நமது இயக்கத்தின் ஊழியங்களில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தார்கள். இவர் ஜெபக்குழுக்களில் கலந்து கொண்டும், காணிக்கை சேகரித்து அனுப்பியும், தனது குடும்பத்தின் சார்பாக இரண்டு மிஷனெரிகள் மற்றும் குழந்தையைத் தாங்கி ஆதரித்தும் வந்தார். மேலும், இவர் பணி மாவட்ட கூடுகைகள் ஒருங்கிணைப்பாளராக மிகவும் அர்ப்பணத்தோடும் பணிவோடும் செயல்பட்டு வந்தார். நீண்ட நாட்களாகச் சிகிட்சை பெற்றுவந்த இவரின் மனைவி திருமதி. லீலாபாய் ஜோன்ஸ் மகிமைக்குள் பிரவேசித்த 5-வது நாளில், இவரும் 04.06.2021 அன்று தனது 71-ம் வயதில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். தாய், தகப்பனாரை இழந்து தவிக்கும் இவரது மகள், மருமகன் மற்றும் பேரப்பிள்ளையை தேவன்தாமே ஆறுதல்படுத்தி, பெலப்படுத்த ஜெபிப்போம்.





திரு. ஆஞ்சலோ பிரபாகரன் அவர்கள், கடந்த 05.06.2021 அன்று தனது 60-வது வயதில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். இவர் திருச்சி - பொன்மலை ஜெபக்குழுவில் 1995 - ல் இணைந்து, பொன்மலை பகுதி முன்னேற்றப்பணியில் தன்னிகரற்ற தலைவராக விளங்கினார். 1997 முதல் சுமார் 25 ஆண்டுகள் பணித்தள விஜயங்களில் குடும்பமாகப் பங்கேற்று, மிஷனெரிகளுக்காக ஜெபித்து, பிறரையும் அவ்வாறே உற்சாகப்படுத்தி வந்தார். 5 ஆண்டுகள் பொன்மலை பகுதி முன்னேற்றப் பணியில் கௌரவ முன்னேற்றப்பணி செயலராகவும் சிறப்பாகச் செயல் பட்டார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது அன்புமனைவி திருமதி. பவுலின் மற்றும் மகன் திரு. பிரிட்டோ ஆகியோரின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.



திரு. ஞான சிகாமணி அவர்கள், கடந்த 28.09.2020 அன்று இவ்வுலக ஓட்டத்தைக் கர்த்தருக்குள் ஓடி முடித்து, நித்திய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர்கள் தன்னுடைய மனைவி திருமதி. ஹெப்சியுடன் இணைந்து நமது ஊழியத்திற்காக ஜெபித்தும் காணிக்கை சேகரித்தும் உதவி செய்தும் வந்தார்கள். மேலும் குடும்பமாக மிஷனெரிகளுக்குப் பொருளுதவி செய்துத் தாங்கியும், ஊழியர்களை உபசரித்தும் வந்தார்கள். இவர்களுடைய மகன் Dr. ரூபல்லோ சாமுவேல், USA-ல் ஹாட்சன் பகுதியில் நமது ஊழியத்தைச் செய்து வருகிறார்கள். இந்தக் குடும்பம் நமது மால்தோ மற்றும் சந்தால் மக்களுக்காக ஜார்க்கண்டிலுள்ள சண்டிகோலா பகுதியில் ஒரு மருத்துவமனையைக் கட்டித் தந்துள்ளனர். திரு. ஞானசிகாமணி அவர்கள் விட்டுச்சென்றுள்ள அவரது மனைவி, மகன் மற்றும் மகளின் குடும்பங்களை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.



திருமதி. பிரேமா தனராஜ் அவர்கள் (வயது 80), பெங்களூர்-தெற்குப் பகுதியை மையமாக வைத்து கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மிகச் சிறப்பாக நமது ஊழியத்தில் செயல்பட்டு வந்தார்கள். பெண்கள் மத்தியில் ஜெபக் குழுக்களை நிறுவியும், அவைகளைக் கிரமமாக நடத்தியும், அநேக ஜெபக் குழுத்தலைவர்களை உருவாக்கியும், அநேகருக்கு மிஷனெரி தரிசனத்தை ஊட்டியும் வந்தார்கள். நமது இயக்கத்தின் மீதும், நமது மிஷனெரிகளின் மீதும் இவர்கள் கொண்டிருந்த அன்பும் பற்றும் அளவிடப்பட முடியாதது. தேவன்மேல் இவர்கள் கொண்டிருந்த விசுவாசம், இவர்களைத் தனது இறுதி மூச்சுவரை அயராது ஊழிய ஈடுபாடு கொள்ளவும், அநேகருக்கு முன்மாதிரியாகவும், ஆசீர்வாதமாகவும் நிலைநிறுத்தியது. இவர்கள் கடந்த 2021 ஜூன் 30-ம் தேதி, தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். இவர்களது அழகிய அர்த்தமுள்ள வாழ்விற்காக தேவனை அதிகம் துதிக்கிறோம். இவர்கள் விட்டுச் சென்றுள்ள கணவர் சகோ.தனராஜ், மகன் திரு. எபி குடும்பம், மகள் மற்றும் பேரக்குழந்தைகள் யாவரையும் தேவன் தாமே ஆற்றித்தேற்றி, பெலப்படுத்த ஜெபிப்போம்.



திருமதி. பாப்பா செல்வபாய் பாலசிங் (வயது 84) அவர்கள், கடந்த 30.06.2021 அன்று இவ்வுலக ஓட்டத்தை முடித்து, கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு-மதுரை தெற்கு, பழைய குயவர் பாளையப்பகுதியின் ஜெபக்குழுத்தலைவராக ஜெபக்குழுவை நடத்துவதிலும், காணிக்கை சேகரிப்பதிலும், ஊழியத்தேவைகளைச் சந்திப்பதிலும் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். இவர் நிறைவேற்றி வந்த ஊழியப்பணியினைத் தொடர்ந்து செய்ய தலைமுறைகளை தேவன் எழுப்ப வேண்டுதல் செய்வோம். இவர் விட்டுச்சென்றுள்ள மகன், மகள் குடும்பத்தினர் அனைவரையும் நமது ஜெபங்களில் தாங்கிக் கொள்வோம்.



வேலூர் பணி மாவட்டத்தின் மிஷனெரி ஆதரவாளரும், ஜெபப் பங்காளருமான திருமதி. ரேணுகா ஜேக்கப் (திரு. S.D.A. ஜேக்கப் அவர்களின் மனைவி) அவர்கள், கடந்த 26.04.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். புனித மாற்கு மேல்நிலைப்பள்ளியின் நிர்வாகியும், முதல்வருமான இவர் நமது ஊழியங்களில் அதிக ஈடுபாடு உடையவர். இவர் தனது பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நமது இயக்கத்தின் சார்பாக சிறப்புக் கூடுகை நடத்தி, அவர்களும் மிஷனெரி பாரத்தைப் பெற்றிட ஊக்குவித்தவர். இவருடைய மறைவு நமக்கு ஒரு பெரிய இழப்பாகும். திரு. ஜேக்கப் அண்ணன் மற்றும் மகள் குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.

ஆகஸ்ட்
1
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மதுரா சாந்தி ரம்யா ராஜு
திரு. மஞ்ஜ்யா நாயக், திரு. ராஜா B.
திருமதி. ஃப்ளாரன்ஸ் தௌஜபோ
திருமதி. ஜெபராணி எபநேசர் சாம்
திரு. க்ருபா ரக்ஷ்னா பரே

# ஜம்மு

## ஆர். எஸ். புரா & அக்னூர்:

### டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** நமது ஆராதனைக்கு ஆக்ரா சாக்கிலிருந்து புதிதாக இரண்டு குடும்பங்கள் வந்து கலந்து கொள்கின்றனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. ஊழியப்பயிற்சி கூடுகைகள், மாலைநேர ஜெபக்கூடுகைகள், வெளிசந்திப்பு ஊழியம் மற்றும் ஊழியப் பின்தொடர்பணிகள் யாவையும் சிறப்பாக நடத்தி முடிக்க தேவன் கிருபை செய்தார். குல்லியன் கிராம நமது விசுவாசி சந்தோஷி தேவி மற்றும் அவரது குடும்பத்தினரைக் கோவிட்-19 னின் அறிகுறியிலிருந்தும், நமது சுதேச ஊழியர் பாஞ்சம் பைரவாவின் தகப்பனார் ரமேஷ் சாந்தைக் கோவிட்-19னிலிருந்தும், சின்னூர் கிராம குல்சானைக் கண்பார்வை பிரச்சனையிலிருந்தும், காதர்பூர் கிராம ஜான்வியைப் பக்கவாதத்திலிருந்தும் தேவன் சுகப்படுத்தினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆர்.எஸ்.புரா பகுதியில் ஆராதனை நடத்த ஒரு தகுந்த இடம் கிடைக்க; ஆக்ரா சாக் கிராம சந்திரகலாவை மூலப்பிரச்சனையிலிருந்தும், சுமன், சுனிதாவைக் காசநோயிலிருந்தும், சின்னூர் கிராம சானியாவைத் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; நமது விசுவாசிகளான படையல் கிராம சஞ்சய், ஆக்ரா சாக் கிராம சந்திரகலா, ரேவதி ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைதுணைகளமைய; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குத் திரும்ப ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

## தானேதார்:

### உம் பியாக் லால் & நியாங் கான் மான்

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷ வசனங்களால் சந்திக்கப்பட்டுள்ளது. ரீட்டாதேவி, அவரது குடும்பத்தினர், ரமேஷ், ஊர்மிளா ஆகியோர் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். பினோத் மற்றும் முஸ்கானைக் கோவிட்-19 னிலிருந்து தேவன் சுகமாக்கினார். செர்ரி பழ விளைச்சலின் மூலம் நல்ல வருமானத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் நமது விசுவாசிகளுக்குப் பாராட்டிய கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பண்டிதர்களும், துறவிகளும் வசிக்கும் குமார்சைன் தாலுகாவில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட; தீய ஆவிகளின் பிடிகளினிமித்தம் பல்வேறு நோய்களுக்கு ஆளாகியிருக்கும் நிரு மற்றும் துரைதேவி பூரண சுகமடைய; மரத்திலிருந்து கீழே விழுந்து, அநேக எலும்பு முறிவுகளுக்குள்ளாகியிருக்கும் ராதா அற்புத சுகம் பெற; நமது ஊழிய மேம்பாட்டிற்குத் தேவையான நல்ல ஊழிய நபர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
2
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. தவ்ங் கான் கப்

செல்வி. குமாரி பாரதி மஹாதேவ்

### ஆனி: ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்

**துதிக்க:** முதன்முறையாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. நமது விசுவாசி சுனிதாவிற்கு இருந்த நிலப் பிரச்சனை ஜெபத்தின் மூலம் சுமூக மாகத் தீர்வடைந்தது. பல்வேறு பெலவீனங் களிலிருந்து தேவன் தாருவைக் குண மாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நீதார் கிராமத்தில் ஆராதனை துவங்க முறையான அனுமதி கிடைக்க; இருதய அறுவை சிகிட்சைக்கு ஆயத்த மாகும் நமது விசுவாசி நீர் சாந்தின் தேவைகள் சந்திக்கப்பட; நமது விசுவாசி பாபிக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

# பஞ்சாப்

## புத்லாடா:

### சஞ்சீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** புதிதாக இரு நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். பிந்தர் கௌர், கிருஷ்ணா சிங் மற்றும் சந்தோஷ் கௌரைக் கோவிட்-19னின் அறிகுறி பெலவீனங்களிலிருந்தும், ராஜேந்தர் சிங் மற்றும் ஜஸ்பிரீத்தை அதிக மன அழுத்தம், மன உளைச்சலிலிருந்தும் தேவன் குணமாக்கினார். புத்லாடா ஆலயத்தின் கழிவறையைப் புதுப்பிக்கும்பணி சிறப்பாக முடிவடைந்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழிய விரிவாக்க வளர்ச்சியை முன்னிட்டு மூணாக் மற்றும் தல்வாடி துணை மையப்பகுதிகளில் நல்ல சுதேச ஊழியர்கள் பணியமர்த்தப்பட; மூணாக் பகுதியைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளர்களான ராஜிந்தர், கிருஷ்ணா, தாமோதரா ஆகியோர் குடிப்பழக்கத்தி லிருந்து விடுபட; ரல்லி, காளிபூர், பாப்டி, கனக்வால், புத்வால் மற்றும் சிர்சிவால் கிராமங்களில் நமது ஊழியம் வளர்ச்சிப் பெற; நமது வெளிசந்திப்பு ஊழியங்களில் இளம் விசுவாசிகள் உற்சாகமாகப் பங்குப்பெற ஜெபிப்போம்.

## பட்டிண்டா & பர்னாலா:

### கிருபா ரக்ஷனா பரே & ஷகினா

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத் துள்ளனர். கடந்த மாத கூடுகைகள் மற்றும் ஆராதனைகள் யாவையும் எவ்விதத் தடையுமின்றி நடத்தி முடிக்க தேவன் உதவி செய்தார். மௌர் மண்டி கிராம நமது இளவயது விசுவாசியான அமன்தீப் கௌர் தனது 10-ம் வகுப்பை வெற்றியுடன் முடிக்க தேவன் கிருபை செய்துள்ளார். கடந்த சில நாட்களாக வேலைக்குச் செல்ல முடியாதபோதும் நமது விசுவாசி ராஜேந்தர் சிங்கிற்கு மீண்டும் அவ்வேலை கிடைக்க தேவன் உதவினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராம்புரா கிராம பிட்டு சிங்கை வலிப்பு வியாதியிலிருந்தும், சந்தோஷ் கௌரைப் புற்றுநோயிலிருந்தும், பலியாவாலி கிராம கோல்டி சிங்கைத் தோல் ஒவ்வாமையிலிருந்தும் தேவன் குண மாக்க; பிர்கோத் கிராம கேலா சிங் தனது குடிப்பழக்கத்தை விட்டுவிட; பாபு சிங், ஜாட் சிங், மஜ்பி சிங், லக்கி சிங் மற்றும் ராஜா சிங் என்ற நமது விசுவாசிகளுக்கு நல்ல வாழ்க்கைதுணைகள் கிடைக்க; தவறான குற்றச்சாட்டுகளினால் நீதிமன்ற வழக்கில் சிக்கியுள்ள ரீத்துவிற்கு அதிலிருந்து விடுதலை கிடைக்க ஜெபிப்போம்.

## ஆகஸ்ட் 3 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கல்பனா மல்லிக் பப்லு

### சங்ரூர்: ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

**துதிக்க:** புதிதாக இரு நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். ஊரடங்கிற்குப்பின் நமது அனைத்து திருச்சபைகளிலும் மீண்டும் ஆராதனைகள் துவங்கப்பட கர்த்தர் கிருபை செய்துள்ளார். வகீலிற்கு மூல வியாதியிலிருந்தும், அக்ப ஹிற்கு மூச்சுத்திணறல் கோளாறிலிருந்தும் தேவன் சுகம் தந்தார். அதிகச் சிரமங் களினூடே நமது சுதேச ஊழியர்களுக்குக் கோவிட்-19னின் தடுப்பூசி போட தேவன் வாய்ப்பளித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக வெப்பம் மற்றும் மின் தடங்கலினிமித்தம் உடல் நீர்வறட்சி பிரச்ச னைக்கு ஆளாகும் நமது விசுவாசிகளின் சரீர ஆரோக்கியத்திற்காக; ஹர்ஜத் கௌரை மன உளைச்சலிலிருந்தும், கோமலைக் காசநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; பாரோவின் இரட்சிப்பிற்காகவும், குடிப் பழக்கத்திலிருந்து தீபக் விடுவிக்கப்படவும்; சோமாவின் குடும்பத்தில் தேவசமாதானம் காணப்பட ஜெபிப்போம்.

### அஹ்மத்கட் மண்டி: சௌதரி ராஜேஷ் தவ்லேபாய் & சரிதா பால்

**துதிக்க:** மான்சுரா கிராம சரண்ஜித் கௌர், சத்யாதேவி ஆகியோரின் குடும்பங்கள் புதிதாக நமது ஆராதனைகளில் வந்து கலந்து கொள்கின்றனர். விக்கி சிங்கின் குடும்பத்திற்கு தேவன் மழலை பாக்கியத்தைக் கட்டளையிட்டார். நமது விசுவாசி சோனு கௌருக்கு நல்ல வாழ்க்கைதுணை அமைந்துள்ளது. நமது விசுவாசிகளான ககன் கௌர் மற்றும் சோனி மந்திருக்கு லூதியானாவில் வேலை கிடைத்துள்ளது. சுக்தேவ் நகரைச் சார்ந்த வித்யா தேவியின் குடும்பத்தில் தேவன் தமது சமாதானத்தை ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து ஜெகதா ரோடு பகுதி நீத்து ராணி கௌர் மற்றும் நேகாவையும், சன்னா கிராம சர்ப்ஜித் கௌரையும், தல்லர் கிராம மன்தீப் கௌரையும் தேவன் விடுதலை செய்ய; மான்சுரா கிராம சத்யாதேவி கௌரைப் புற்றுநோயிலிருந்தும், சரண்ஜித் கௌரை வாய்ப்புற்றுநோயிலிருந்தும், மன்னா கிராம தீபக்கைச் சிறுநீரகக் கோளாறிலிருந்தும் தேவன் சுகமாக்க ஜெபிப்போம்.

### மான்சா: தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** ஜுனிர் துணை மையத்தி லிருந்து புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். மான்சா மற்றும் ஜுனிர் துணைமையத்தி லிருந்து 3 குடும்பங்கள் முதன்முறையாக நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். நமது விசுவாசி குர்ஜுத் சிங்கின் திருமணத்தை எவ்விதப் பிரச்சனை யுமின்றி கிறிஸ்தவ முறையில் நடத்தி முடிக்க தேவன் அநுக்கிரகம் ஈந்தார். கண் தொற்றுநோய்க்கிருமி பிரச்சனையிலிருந்து தேவன் குல்விந்தர் கௌரைச் சுகமாக்கி யதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஏதோ ஒரு கடுமையான நோயி லிருந்து சுகம் பெற, தேவன் மீது நம்பிக்கை கொண்டு நமது ஆராதனைகளில் வந்து கலந்து கொள்கின்ற நமது புதிய தொடர் பாளரான ரட்சணா கௌருக்கு தேவன் அற்புத சுகம் தர; கய் திருச்சபையிலிருக்கும் நிலப்பிரச்சனை நல்தீர்வு பெற; தானேவாலா ரோடு பகுதி நமது விசுவாசி சந்தீப் சிங்கின் திருமணத்தை தேவன் ஆசீர்வதிக்க; நமது மிஷனெரி மன்னா சிங்கிற்குச் சுகப்பிரசவம் சம்பவிக்க ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
4
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மங்கையர்க்கரசி பெஞ்சமின்

திருமதி. சுவிலா ஞானப்பூ டேனியல்

### லேஹ்ரகாகா: ஐசக் ஆபேல் & அன்னாள் ரோஸ்லின்

**துதிக்க:** தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் மஞ்சுவை விடுவித்தார். பெரும் மின்சார அதிர்வு ஆபத்தினின்று தேவன் சேவாக்கைக் காப்பாற்றினார். கோத்ரா கிராம மஜுர் சிங்கின் முழுக்குடும்பமும் நமது ஆராதனையில் தவறாமல் வந்து பங்குப்பெறுகின்றனர். தனது குடும்பத்தினரை ஆராதனைக்கு வரவிடாமல் தடை செய்து கொண்டிருந்த பிரீத்தி, மனந்திரும்பித் தனது சமாதானத்திற்காகவும் ஆத்தும இரட்சிப்பிற்காகவும் ஜெபிக்கத் தொடங்கியுள்ளார். பிகர்வால் கிராம நமது விசுவாசி தில்பாக் சிங் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக ஆர்வத்துடன் சுவிசேஷத்தைக் கேட்ட ஜவாந்தி கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; சரீர வீக்கத்திலிருந்து பரம் ஜீத் கௌர் சுகம் பெற; விக்கி மற்றும் அவரது குடும்பத்தினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; தனது குடும்பத்தினருடன் நமது ஆராதனையில் வந்து பங்குப்பெறும் நஜார் சிங் குடிப்பழக்கத்தை விட்டுவிடவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## ஹரியானா

### ஜீவன் நகர்:

### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். தபாவளி, சிர்சா மற்றும் ஹிசார் பகுதிகளில் கைபேசி கூட்டிணைப்பு அழைப்பு வசதிகளின் மூலம் வேதாகம வகுப்புகளையும், ஜெபக்கூட்டங்களையும் நடத்த தேவன் சிலாக்கியம் தந்தார். ஓட்டு கிராம கமலின் குடும்பத்தைப் புழுதி சூறாவளியிலிருந்து காப்பாற்றியதற்காகவும், நமது சுதேச ஊழியர் நவ்ஜோத் ரந்தாவஹ்றின் மனைவி கரிஷ்மாவிற்கு ஐந்துமுறை ஏற்பட்ட கருச்சிதைவுகளுக்குப்பின் இம்முறை சுகப்பிரசவம் ஈந்து தாயும் சேயும் நலமாய் இருப்பதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில தளர்வுகளுக்குட்பட்ட ஊரடங்கின் நாட்களில் நடைபெறும் நமது ஊழியங்களுக்கு எந்தவிதத் தடைகளும் வராமலிருக்க; தபாவளி கிராம நமது விசுவாசி ஸ்வீட்டாவிற்குக் குழந்தை செல்வம் கிடைக்க; சிர்சாவின் மினி செக்டார் பகுதியைச் சார்ந்த சுக்தேவை வயிற்று தொற்றுக்கிருமி நோயிலிருந்தும் ஓட்டு கிராம ஷியாம் சிங்கைச் சிறுநீரகக் கோளாறிலிருந்தும் தேவன் சுகம் பெறச் செய்ய ஜெபிப்போம்.

### மனம் மாறிய இதயம்!

*ஹரியானா, ஜீவன் நகர் பணித்தளம். சிர்சாவிலுள்ள சுரேஷ் என்பவரின் வீட்டில் வைத்து நமது ஊழியர்கள் ஜெபக்கூட்டம் நடத்தும்போது, சுரேஷின் நெருங்கிய உறவினரான உமேஷ்குமார் மட்டும் எப்பொழுதும் வீட்டில் தங்காமல் வெளியே போய்விட்டு, பின்னர் ஜெபம் முடிந்ததும் நடைபெறும் இரவு உணவுப்பந்தியில் மட்டும் வந்து கலந்து கொள்வார். சுவிசேஷத்தை அவருடன் பகருவதற்கு வாய்ப்பே அளிக்க மாட்டார் எனவே, நமது ஊழியர்கள் மனமாற்ற அவருடைய மனமாற்றத்திற்காக ஏறத்தாழ ஒரு வருடம் தொடர்ச்சியாக ஜெபித்து வந்தனர். அதன்பொருட்டு, கர்த்தர் அவரைத் தொட்டார், அவர் இதயம் மாறியது. இப்பொழுதெல்லாம் அவர் நமது ஊழியர்கள் நடத்தும் அந்த ஜெப ஐக்கியத்தில் தனது குடும்பத்தினரோடு சேர்ந்து கர்த்தரைப் போற்றிப்பாடவும், வேதாகமத்தை விரும்பி வாசிக்கவும் செய்கிறார். கர்த்தருக்கே மகிமை!*

ஆகஸ்ட்

5

வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜோத்ஸ்னா தேவி பிரசாந்த்

திருமதி. மேஷ்ராம் கல்பனா வால்வி நேதாஜி

## கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** புதிதாக 120 நபர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் உதவி செய்தார். ஊரடங்கிற்குப்பின் நமது அனைத்துப் பணித்தளங்களிலும் ஜெபக் கூடுகைகளையும் ஆராதனைகளையும் மீண்டும் ஆரம்பிக்க தேவன் அநுக்கிரகம் செய்துள்ளார். நமது புதிய தொடர்பாளர்களான பாரு, தர்ஷன், மன்பிரீத், தர்ஷிம் மற்றும் ஜீத்துவின் குடும்பம் நமது ஆராதனைகளில் தவறாமல் வந்து கலந்து கொள்கின்றனர். ஜக்மால்வாலி கிராம பரம்ஜீத்தின் மறைவினால் துயரத்திலிருந்த அவரது குடும்பத்தினரை தேவன் ஆறுதல் படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்ளும் புதிய தொடர்பாளர்களின் ஆத்தும இரட்சிப்பிற்காக; தங்களுக்குள்ளே தவறான புரிந்து கொள்ளுதலினால் பிரிந்து காணப்படும் நமது விசுவாசிகளின் ஒற்றுமைக்காக; வேதாகம வகுப்பு, உபவாச ஜெபம் மற்றும் இதர ஆவிக்குரிய நிகழ்ச்சிகளில் நமது விசுவாசிகள் நல்லார்வம் காட்ட; ஆசிர் கிராமத்தின் ஆலயக்கட்டுமானப்பணி தடையின்றி நடைபெறவும் நமது விசுவாசிகள் யாவரும் அக்கட்டுமானப்பணியில் உற்சாகத்துடன் ஈடுபடவும் ஜெபிப்போம்.

## தோஷம்:

### ஜாண் டேவிட்சன் செல்வராஜ்

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் சிலுவையன்பை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளார். கடுமையான வியாதியிலிருந்து பிங்கியையும், ஆஸ்துமா நோயிலிருந்து பான்சியையும், வயிற்றுக்கட்டியிலிருந்து குல்சானையும், கோவிட்-19னிலிருந்து சந்தோஷையும் தேவன்ஆரோக்கியமடையச் செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெப்ப வானிலை காரணமாகப் பரவும் அபாயத்திலிருக்கும் டெல்டா வைரஸிலிருந்து தேவன் நமது அனைத்து விசுவாசிகளையும் பாதுகாக்க; நமது விசுவாசி கவிதாவிற்கு நல்ல வேலையொன்று கிடைக்க; காசநோயிலிருந்து சாஹில் சுகமடைய; பிரேம்நகர் சோனா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற; இன்னும் சில இடங்களில் கோவிட்-19னிற்கான கட்டுப்பாடுகள் கடுமையாக இருக்கின்றபோதிலும் அங்கே நடைபெறும் நமது ஊழியங்களுக்குத் தடைகள் நேரிடாமலிருக்க ஜெபிப்போம்.

## *விஷக்காளானால் வந்த விபரீதம்!*

*சத்தீஸ்கட், கர்கோடா பணித்தளம். புதிபாலி என்ற கிராமத்தில் ஒரு வீட்டில் வைத்து நமது ஊழியர்கள் இரவு நேர பஜன் கூடுகையை நடத்தினர். அநேகர் அதில் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றனர். அக்கூடுகைக்குப் பின்னர், அவ்வீட்டார் அறியாமையினால் விஷக்காளானைக் கொண்டு சமைக்கப்பட்டிருந்த உணவை உண்டுவிட்டு உறங்கி விட்டனர். திடீரென நடுராத்திரியில் அவர்கள் யாவருக்கும் வாந்தி மற்றும் தலைசுற்றல் பிரச்சனைகள் ஏற்பட்டன. இதையறிந்த நமது மிஷனெரிகள் அவர்களுக்காக ஜெபித்தனர். மரணப் போராட்டத்திலிருந்த அவர்கள் யாவரும் கர்த்தரால் சுகம் பெற்றனர். இதைக் கண்ட கிராமத்தார் அனைவரும் கர்த்தருடைய வல்லமையைக் குறித்து மிகவும் ஆச்சரியப் பட்டனர். கர்த்தருக்கே மகிமை!*

**ஆகஸ்ட்**

**6**

**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுதாராணி ரவி

# உத்தரகாண்ட்

## மல்தன்சோா்:

### ஷிஷூ பால் & அனிதா

**துதிக்க:** முதன்முறையாக 6 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் அடைக்கலம் நாடி வந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் விதைக்கப்பட்டுள்ளன. நமது போக்பூர் திருச்சபை விசுவாசிகள் மிஞ்சியுள்ள தங்களது ஆலயக்கட்டுமானப் பணிக்கான நிதித் தேவைகளைத் தாங்களாகவே சேகரித்துள்ளனர். நமது விசுவாசி சேகரை தேவன் கோவிட்-19னிலிருந்து சுகப்படுத்தி பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இவ்வருடம் பழைய வழக்கம் போல் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள் நடைபெற; எல்லாத் திருச்சபைகளிலும் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் தவறாமல் நடத்தப்பட; பிரஜாபதி மற்றும் சிந்தி மக்களினங்கள் மத்தியில் செய்யத் திட்டமிட்டிருக்கும் ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; இரத்த தொற்றுக் கிருமியிலிருந்து தேவன் ஜங்கீர்சிங்கை முற்றிலுமாகக் குணப்படுத்த ஜெபிப்போம்.

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

### P.G. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** இணையதள நிகழ்நிலை வாயிலாக ஜுன் மாதத்திற்குரிய ஞாயிறு ஆராதனைகளையும், புதன்கிழமை ஜெபநேரங்களையும் நடத்தி முடிக்க தேவன் ஒத்தாசை காண்பித்தார். ஜும் மற்றும் கைபேசி கூட்டிணைப்பு அழைப்பு வசதி மூலம் தொடர்ந்து டெல்லி பட்டணத்திற்காக அங்குள்ள ஜெபக்குழுக்கள் ஜெபித்து வருகின்றனர். ஜும் அழைப்பின் மூலம் 3 சனிக்கிழமைகள் தோறும் நடைபெற்ற இளம் வாலிபர்களுக்கான ஆலோசனை நேரப்பகுதியில் அநேக வாலிபர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டு, தங்களது சந்தேகங்களைக் கேட்டறிந்து தேவ ஆசீர்வாதம் பெற்றனர். கோவிட்-19னிலிருந்து நிஷா பல்கிசோர் பூரண சுகமடைந்து, தனது வாழ்வாதாரத்திற்கான நல்வேலையையும் கிடைக்கப் பெற்றார். நமது விசுவாசி பிரீத்திக்கு டெல்லி சிவில் பாதுகாப்புத் துறையில் நல்ல வேலையொன்று கிடைக்க தேவன் அருள்புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது மூத்த மகனை இழந்து தவித்துக்கொண்டிருக்கும் தாயார் தங்கம்மாவிற்காக; தேசிய தலைநகரத்தைச் சார்ந்துள்ள பட்டணப்பகுதிகளில் புதிதாக ஒரு சுதேச ஊழியர் பணியமர்த்தப்பட; ராணி, எலிசபெத், தீபா ஆகியோர் காசநோயிலிருந்தும், குல்தீப் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், கல்யாண்புரி கிராம அர்ச்சனா தோல் அழிநோயிலிருந்தும் (lupus), ராமாவதி, சுபோத், விஜயா ஆகியோர் பக்கவாதத்திலிருந்தும் அற்புத சுகம் பெற; சுவிசேஷத்தின் மீது அக்கறை காட்டும் சங்கர் & ராஜேஸ்வரி இரட்சிப்படைய ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
**7**
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. மோசஸ் முரளிதரன்
திரு. நரேந்திர பஹதூர்

# ராஜஸ்தான்

## ஸ்ரீ கங்காநகர்:

### V. குமார் & பெட்ரிஷியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தைச் சுவிசேஷத்தினால் சந்தித்துள்ளனர். நமது விசுவாசி சுபாஷின் வாழ்வாதாரத் தேவைக்கு ஒரு காய்கறிக்கடை திறக்க தேவன் உதவி செய்தார். 5H பகுதியிலிருந்து சுக்பிரீத் என்ற இளவயது விசுவாசியொருவர் நமது ஊழியத்தில் உதவி செய்யத் தன்னார்வமாக முன் வந்துள்ளார். லோஹ்ரா பகுதி நமது விசுவாசி அமன்தீப்பின் குடும்பத்தில் குழந்தை பாக்கியத்தை தேவன் அருளியுள்ளார். தனது வியாபாரத்திற்காக ஒரு மினிலாரி வாங்க தேவன் நமது விசுவாசி பஜான் சிங்கிற்கு உதவியுள்ளார். குருசார் 2W பகுதியைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளர் ஷாலி வேத வசனத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் வளர தேவன் கிருபை பாராட்டுகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 5 கிராமங்களில் புதிதாக விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டிருக்கும் காரியத்தில் தேவ ஆசீர்வாதம் நிறைவாய்த் தங்கியிருக்க; குர்மீத் சிங்கை மூலப் பிரச்சனையிலிருந்தும், சந்தீப் சிங்கை வயிற்றுப்புண் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்க; தல்வீர்கேடா கிராம ஹர்பிரீத் கௌரைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

## அல்வர் விடுதி:

### பங்காரு நாயுடு கர்ரி & ஈமண்டி அனுராதா

**துதிக்க:** பத்கோல் கிராம ராய்சீக் இனச்சமூகத்திலிருந்து புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். நமது விசுவாசியொருவர் தனது 15 வருட திருமண வாழ்விற்குப்பின் தற்போது சுகப்பிரசவம் மூலம் குழந்தை பெற்றுள்ளார். நமது சபை மூப்பர்கள் அநேகரைக் கிறிஸ்து வண்டை சேர்க்க நல்முனைப்புடன் செயல்படுகின்றனர். பர்வாடா கிராமத்தில் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. தங்களது வீடுகளில் சாராய பானம் தயாரிக்கும் பர்வாடா கிராம மக்களின் மனங்களை தேவன் மாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளில் வாலிபர்களும், சிறுவர் சிறுமியர்களும் மிகுந்த ஆர்வம் காட்ட; புதிதாகச் சுவிசேஷத்தைக் கேட்டுள்ள 180 நபர்களின் இரட்சிப்பிற்காக; தினக்கூலிகளாகப் பணிபுரியும் நமது விசுவாசிகளின் மீது தெய்வீகக் காவல் நிழலிட; பிரசவத்தின் போது தங்களது குழந்தையை இழக்கக் கொடுத்து ஆறுதலின்றி அழுது கொண்டிருக்கும் பிந்தரை தேவன் ஆறுதல்படுத்த; கொடிய சரீர வேதனையினால் அவதியுறும் தீவன்சிங் அற்புத சுகம் பெற; பனியா மக்களினம் மத்தியில் ஆவிக்குரிய எழுச்சி உருவாக ஜெபிப்போம்.

## ஆகஸ்ட் 8 ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆண்ட்ரூஸ் ஜவஹர்
திருமதி. ஹெப்சிபா ஆண்ட்ரூஸ்
திருமதி. மஹாலா ஷீலாபேன் பகுஜ்யாபாய்
செல்வி. வினோதினி

### ஜூன்ஜுனு: அருள்ராஜ் எபநேசர் & ரோஸ்லின்

**துதிக்க:** மெய்நிகர் வேதாகமப்பள்ளி (Virtual Bible Study) வாட்ஸ் அப் மூலம் வீடியோக்களைப் பகிர்ந்து கொண்டதினால் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. இக்கொரோனா தொற்று நோய்க் காலங்களில் தேவன் நமது ஊழியர்களையும் விசுவாசிகளையும் பாதுகாத்துக் கொண்டார். நமது புதிய விசுவாசி விமலேஷிற்குத் தேவன் குழந்தை பாக்கியத்தை அருளியமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் தீபக் மற்றும் சந்திரா மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்க; தீனாவைப் பக்கவாதத்திலிருந்தும், குகனை இருதயக் கோளாறிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; ஆஷா & கமலேஷ் தம்பதியிடையே சமாதானம் உண்டாக; சுசிலா, ஷம்பு, கமல் சிங், சீத்தாள், கிரண், பாவ்யாவின் தாயார், சந்தீப்பின் மனைவி ஆகியோருடைய இரட்சிப்பிற்காக; நமது விசுவாசி விஜய்யின் புதிய வியாபாரம் செழிப்படைய; நமது விசுவாசிகளின் பிள்ளைகளான வனிஷிகா, பிரீத்தி, மதுசூதன் ஆகியோர் பங்குப்பெறும் தகுதிப்போட்டித் தேர்வுகளில் அவர்கள் சிறந்த முறையில் வெற்றி பெற; இப்பணித்தளத்திற்குள்ளும் புறமும் இயேசுவை ஏற்றுக்கொள்ள தடையாக இருக்கும் தீய சக்திகளின் பெலன் அற்றுப்போக ஜெபிப்போம்.

### பாவோட்டா: சத்திய பிரகாஷ் & அஞ்சனா

**துதிக்க:** பயின்ஸ்லானா கிராமத்திலிருந்து புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். அதே கிராமத்தைச் சார்ந்த நேத்தன் தேவியைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பயின்ஸ்லானா திருச்சபையினருக்கு ஆலயம் கட்ட நல்ல நிலமொன்று கிடைக்க; பங்காரி கிராம கவிதாவை தேவன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்க; கோட்புத்லி கிராம ரீனாவை உடல் வளர்ச்சியைத் தடுக்கும் கழுத்து சுரப்பி (Thyroid) பிரச்சனையிலிருந்து தேவன் பூரணமாகச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## ஓய்ந்த சத்தம் ஒலிக்க ஆரம்பித்தது!

*மகாராஷ்டிரா, ஜிம்மலாகட்டா பணித்தளம் பெர்காபட்டி கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி சுரேஷ் மாதவ் & சுவப்ணாபாயிற்கு ஆசீர்வாதமான பெண்குழந்தையொன்று பிறந்தது. திடீரென அக்குழந்தை ஒருநாள் இரவெல்லாம் அதிக சத்தத்தோடு அழுது கொண்டிருந்ததைப் பார்த்த அதன் பெற்றோர்கள், மிகவும் பயந்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் மேலும் பயப்பட்டுக் கவலைப்படும் வண்ணமாக சத்தமிட்டு அழுதுகொண்டிருந்த அக்குழந்தையின் அழுகுரல் சட்டென பேச்சுமூச்சின்றி ஓய்ந்தது. என்ன செய்து பார்த்தும் பலனில்லை, சத்தம் கொஞ்சமும் வெளிவரவில்லை. யாதுசெய்வதென்று தெரியாமல் திகைத்தப் பெற்றோர், நமது ஊழியர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அக்குழந்தைக்காக ஜெபிக்க மன்றாடினர். ஊழியர்கள் ஜெபிக்க ஆரம்பித்த வேளையிலேயே நின்றுபோன குழந்தையின் அழுகுரல் மீண்டும் ஒலிக்க தேவன் உதவி செய்தார். அடுத்தநாள் காலையிலேயே தங்களது குழந்தையோடு நமது ஊழியரின் வீடு நோக்கி வந்த அப்பெற்றோர் தங்களது சாட்சியைக் கூறி, தேவனை மகிமைப்படுத்தினர். தேவனுக்கே துதி!*

ஆகஸ்ட்
9
திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி ஜோஷஃபின் ஷீபா

## உதய்பூர்:

**சுனில் குமார் வசாவா & பீனாக்ஷி**

**துதிக்க:** புதிதாக இரண்டு கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றப்பட்டுள்ளது. தவ்லிபேன் மற்றும் லீலாபேன் இனந் தெரியாத வியாதிகளிலிருந்தும், மோகன் பாய் தீராத கால் வலியிலிருந்தும் சுகம் பெற்றுள்ளனர். கோவிட்-19னால் பாதிக்கப்பட்டிருந்த மகதாதேவ் கிராம நமது விசுவாசிகளில் அநேகர் தேவனால் பூரண சுகமடைந்துள்ளனர். நமது புதிய தொடர்பாளர்களான சுரேஷ்பாய், சுந்தர் பாய், காஞ்சிபேன் ஆகியோர் நமது மகதா தேவ் கிராம திருச்சபை ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். கரேல் கிராமத்தில் ஊழியத்திற்கு எதிராக எழும்பின எதிர்ப்பு களை தேவன் முற்றிலும் தடுத்து நிறுத்தி யமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளான நீர்த்தாபேன் & ஜம்னாலால் தம்பதி யருக்குத் தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள; பம்தி கிராம சுவிசேஷ எதிர்ப் பாளர்கள் அனைவரும் மனந்திரும்ப; எதிர்ப்புகளைச் சந்திக்கும் தலைவாடா மற்றும் பம்தி கிராம விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; ஓக்னா பகுதியில் புதிதாக ஊழியத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்தி ருக்கும் திட்டத்தை தேவன் ஆசீர்வதித்துத் தர; சிறுநீரகக் கோளாறிலிருந்து ஹேனா சுகமடைய ஜெபிப்போம்.

# உத்தரப் பிரதேசம்

**ரணியா: மாங்வெய் ஃபோம் & நிஷா**

**துதிக்க:** நமது விசுவாசிகளான நிரஞ்ஜன் பூர் கிராம சகுந்தலா மற்றும் பூர் கிராம சாந்தி சிக்கந்தரை தேவன் பெரிய விபத்துக்களினின்று பாதுகாத்தார். ஊரடங்கிற்குப்பின் நமது ஊழியச்செயல் பாடுகளை மீண்டும் துவங்க தேவன் கிருபை பாராட்டியுள்ளார். லத்தா கிராம சச்சின் குமாரைத் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்ததற்காகவும், ஹொர்தய்பூர் கிராம ஜக்ராப்பைக் காலெலும்பு முறிவிலிருந்து சுகமாக்கியதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜியாம் சிங் யாதவ், மது, ராம் சினேகி, சுனில் ஆகியோர் இரட்சிப்படைய; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, குடும்பத்தில் பொறுப்பற்றிருக்கும் ராஜ்துபே மனம் மாற; ரஜினி சுக்லாவிற்கு மழலை செல்வம் கிடைக்க ஜெபிப்போம்.

**பஸ்தி : பும்சோன்சின் & லுன்சிங்**

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளார். முதன்முறையாக ஒரு கிராமத்திற்குள் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. நமது விசுவாசிகளில் அநேகர் கோவிட்-19னால் பாதிக்கப்பட்டபோதிலும், ஒருவரையும் தேவன் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வில்லை. இத்தொற்றுநோய்க் காலச் சூழ்நிலை மெதுவாக சீரான நிலைக்கு மாறவும், நமது ஊழியத்தை முன்போல வழக்கமாகச் செய்யத் துவங்கவும் தேவன் பாராட்டி வருகிற கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முஜானா, சன்ஜன்கலா, செமரியாமா மற்றும் ரமுவாபூர் பகுதி களிலுள்ள நமது திருச்சபைகளின் ஆவிக் குரிய தரமும், ஆத்துமாக்களின் எண்ணிக்கையும் பெருக; ராம் ஆனந்த் மற்றும் அவரது குடும்பத்தினர் யாவரும் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
**10**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சன்மதா மனோகர் தானே

திரு. ஓம்பிரகாஷ்

## பில்ஹோர்: லால் கிஷோர் முர்மு & மார்த்தா சோரேன்

**துதிக்க:** முதன்முறையாக 11 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசப்பாதையில் அடியெடுத்து வைத்துள்ளனர். புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. பெரிய விபத்தினின்று தேவன் சந்தோஷ் குமாரைப் பாதுகாத்தார். பில்ஹோர் மற்றும் பிஸ்தான் பகுதிகளில் வாழும் விசுவாசிகளை தேவன் கோவிட்-19னின் அறிகுறி பெலவீனங்களிலிருந்து காப்பாற்றினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மன்னாவைப் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்க; பில்ஹோர் பணித்தள ஊழியங்கள் வளம் பெற; மார்த்தா சோரேனுக்குச் சுகப்பிரசவம் நிகழ்ந்திட ஜெபிப்போம்.

## ஹசேரன்: ராஜன் & ஜெபமலர்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் உதிர்க்கப்பட்டுள்ளன. பணித்தள அளவில் நடத்தப்பட்ட குடும்பக் கூடுகையை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்ததோடு, அதிகமானோர் அதன்மூலம் பயனடையவும் அருள்புரிந்தார். ஜெகருவாபூர் கிராம பாபுநாதாவைப் பெரிய விபத்தினின்று கர்த்தர் காப்பாற்றினார். கடும் புயல்காற்றின்போது சரிந்து கீழே விழுந்த மரத்தினால் உண்டாயிருக்கக் கூடிய பெரும் உயிர் ஆபத்தினின்று தேவன் காங்கேயபூர்வா கிராம முகேஷைப் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்

**ஜெபிக்க:** பிநோரா கிராம கம்தா பிரசாந்தின் இரட்சிப்பிற்காக; சௌபாஜ்பூர் கிராம அஜித்குமார் & ரீனா, நௌஷாரா பகுதி அகிலேஷ் & ரட்சணா, ஹசரேன் பகுதி அனுராக் & சினேகா ஆகிய தம்பதிகளுக்குக் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; தனது வீட்டில் வீட்டாரின் சம்மதப்படி ஆராதனை நடத்துவதற்குத் தடையாக இருக்கும் ஹர்சந்த்பூர் கிராம ராம்தாஸ் மனந்திரும்ப; ரெகுவா கிராம மதுவின் குடும்ப வாழ்வில் சமாதானம் பிறக்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளியின் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## ஜாலவ்ன்: திலக் & எமிமாள்

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. வேதாகம வினா-விடை நிகழ்ச்சியில் நமது விசுவாசிகள் மிகுந்த உற்சாகத்தோடு பங்குப்பெற்றனர். நமது புதிய விசுவாசி ராக்கி புதிதாக வேறொருவரைக் கிறிஸ்துவின் மந்தைக்கு நேராக வழிநடத்தியுள்ளார். ராஜ்புரா மக்கள் இயேசுவின் நற்செய்தி மீது வாஞ்சை காட்டுகின்றனர். காரா, ரணியா, குக்கர் காவ் பகுதிகளின் நமது புதிய தொடர் பாளர்கள் தேவ வார்த்தையைக் கற்றுக் கொள்வதற்கு அதிக ஆர்வம் தெரிவிக் கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியங்களுக்கு அநேக விதங்களில் இடைஞ்சல்களை ஏற்படுத்தும் ராஜ்குமார் மனந்திரும்ப; நியமத்பூர் மற்றும் ஜாலவ்ன் ஆகிய இடங்களில் நல்ல சுதேச ஊழியர்கள் பணியமர்த்தப்பட; ஜாலவ்ன், பௌலி போன்ற பகுதிகளில் வசிக்கும் விசுவாசிகள், தங்களிடத்தில் முன்பிருந்த சுதேச ஊழியர்களின் தவறான வழிகாட்டுதலுக்கு விலையாகிப்போகாமல் தங்களது விசுவாசப்பாதையில் தெளிவாக நடக்க; நமது சுதேச ஊழியர்களோடு ஏற்பட்ட தவறான புரிந்துகொள்ளுதலைப் புறக்கணித்து, அவர்களோடு திறந்த மனதோடு சீர்பொருந்தி வாழ தேவன் திவான்ஜிக்குக் கிருபை நல்க ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
11
புதன்

*உபவாச ஜெபநாள்*

## புக்ராயான்:
**சாந்தகுமார் & ஜின்சி**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. முங்கிசாபூர் துணைமையத்தில் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. புக்கராயான் பணித்தள ஊழியம் சமாதானமாக நடந்தேறுகிறது. இங்குவாரா மற்றும் சால்பூர் பகுதிகளில் வாழும் நமது விசுவாசிகளில் ஒரு சில இளவயது விசுவாசிகளுக்குத் திருமணம் கிறிஸ்தவ முறையில் நடத்தப்பட தேவன் ஒத்தாசை நல்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நந்து மற்றும் இங்குவாரா திருச்சபைகளில் கருத்துடன் தேவ வார்த்தைகளைக் கற்றுவரும் நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; மூசா நகர் திருச்சபையினரிடையே நமது சுதேச ஊழியர் யாதிஷ் வல்லமையாய் ஊழியம் செய்ய; பிப்ரி ஆலயச் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி சிறப்பாக நிறைவடைய; பிப்ரி திருச்சபையில் பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் தஞ்சம் புக; எல்லாத் திருச்சபைகளிலும் மூப்பர்கள் குழு அமைக்கப்பட ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

## கால்வா:
**பினித் பிரசாத் பர்தன் &**
**அமோஜிதா பர்தன்**

**துதிக்க:** சிக்தலை கிராமத்தில் 21 நபர்கள் முதன்முறையாகக் கிறிஸ்துவின் சிலுவையண்டைக்கு வந்துள்ளனர். ஊரடங்கின் சமயத்திலும் சிக்தலை, தாமா குலாய், லங்கோதி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசலை தேவன் திறந்துத் தந்ததோடு, அநேகர் சுவிசேஷத்தின் மீது ஈடுபாடு கொள்ளவும் உதவி செய்தார். தாமா குலாய் மற்றும் சாலிதானா கிராமங்களில் புதிதாக ஜெபக்கூடுகைகள் தொடங்கக் கர்த்தர் தயவு பாராட்டினார். சிக்தலை கிராம அந்தார் சிங்கிற்கு அவரது வயிற்றிற்குள்ளேயே குடலிறக்கப் பிரச்சனையினால் குடல்குழாய் வெடித்த போதும், அவர் உயிர் பிழைக்க தேவன் கிருபை ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹாசன்புரா, ஆலியா, சரக் கேடா, அகமதாபாத், ஜாம்தாத், சந்தால் பூர், சைதாபாத், மெய்தாராணி-1 மற்றும் மெய்தாராணி-2 ஆகிய கிராமங்களில் கோவிட்-19னினிமித்தம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஆராதனைக் கூடுகைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட; தீவிர எதிர்ப்புகளின் மத்தியிலிருக்கும் நமது தாமா குலாய் பகுதி விசுவாசிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களது ஆவிக்குரிய வாழ்வின் ஸ்திரத்தன்மை நலிந்து விடாமலிருக்க; நமது விசுவாசிகளிடம் எதிர்ப்புக் காட்டும் சாலிதானா கிராம நானிசிங், கலார்சிங் ஆகியோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## ஆகஸ்ட்
## 12
## வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜோதி மேரி ஹெலன் மம்குந்தா

திரு. மத்தியாஸ் மால்தோ

### நேப்பாநகர்:

**ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்**

**துதிக்க:** துக்கய்தாட், மனோஜ் டாக்கீஸ் ஆகிய கிராமங்களில் வெளிசந்திப்பு ஊழியத்தின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பாலாகட் கிராம நமது விசுவாசி அனிலின் தொலைந்துபோன ஆடு மீண்டும் கிடைத்தது. புதிதாகப் பிறந்த குழந்தையொன்றின் பெயர்சூட்டு விழாவில் கலந்து கொண்ட 50 நபர்கள் மத்தியில் தேவவார்த்தையைப் பகர நமது மிஷனெரிகளுக்குத் தேவன் அநுக்கிரகம் பாராட்டினார். நமது விசுவாசிகளில் பலருக்குச் சளி, இருமல் போன்ற சரீர உபாதைகள் இருந்தபோதிலும், கொரோனா தொற்றின் பாதிப்பு நேரிடாத படி தேவன் அவர்களைத் தமது காக்கும் கரத்தினால் மூடி, பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவ அற்புதங்களைத் தங்களது வாழ்வில் அனுபவித்திருக்கும் துக்கய்தாட் கிராம விஷ்ராமின் குடும்பம் முழுவதுமாக இரட்சிக்கப்பட; மனோஜ் டாக்கீஸ் கிராம காஜீயூ தீராத சரீர வலியினின்றும், செயின்புரா கிராம மந்திரிபாய் கருப்பை பிரச்சனையினின்றும், சோபாராம் கடுமையான முதுகுவலியினின்றும் முழு ஆரோக்கியம் பெற ஜெபிப்போம்.

### நிவாலி:

**சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி**

**துதிக்க:** புதிதாக மூன்று கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றப்பட்டுள்ளது. கடந்த மாதம் நடந்த அனைத்து ஊழிய நிகழ்ச்சிகளையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்ததோடு, அநேகரைச் சுவிசேஷத்திற்கு செவிகொடுக்கச் செய்தார். விஷப் பூச்சிக்கடியிலிருந்து குஷியையும், சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து நன்சாபாயையும், கண் கோளாறிலிருந்து ரியா மற்றும் ரிச்சாபாயையும் தேவன் சுகப்படுத்தி காப்பாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோல்யாபானி கிராமத்தில் ஆலயம் கட்டப்பட; கம்பானி கிராமத்தில் நமது ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் யாவரும் மனந்திரும்ப; நிவாலி மற்றும் பன்வா ஆகிய பகுதிகளில் ஆராதனைகள் தொடங்கப்பட; தலை மற்றும் கை வலிகளிலிருந்து ரமேஷும், மம்தாபாயும் சுகமடைய ஜெபிப்போம்.

### தார்: கருணாகர் கர்டா & கீதாஞ்சலி பெஹெரா

**துதிக்க:** புதிதாக 12 நபர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். காலிவாவ்டி மற்றும் நிம்ரானி கிராமங்களில் முதன்முறையாகச் சுவிசேஷ ஒளி படரத் தொடங்கியுள்ளது. பிசாசின் பிடிக்குள்ளிருந்த பூனம் சிங்கை தேவன் விடுவித்து காத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது விருப்பம் தெரிவிக்கும் ககர்தா கிராம சம்தா, சுக்தேவ் மற்றும் நிம்ரானி கிராம கிருஷ்ணா, சாவூன் ஆகிய நமது புதிய தொடர்பாளர்கள் தங்களது பழைய பாவப்பழக்கவழக்கங்களைக் கைவிடவும் இரட்சிக்கப்படவும்; காதி மற்றும் கட்டியா இனமக்களிடையே சுவிசேஷத்தினால் நல்லெழுச்சி உண்டாக; காலிபதி கிராமத்தில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைக்க ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
**13**
வெள்ளி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஞானசேகரி ஜாண் டேவிட்
திரு. அசோக் நாயக்

# ஜார்க்கண்ட்

## அமரபாடா:

## பென்ஹர் & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** புதிதாக 26 நபர்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். அமரபாடா கிராம நகசார் ஹஸ்தா மனநோயிலிருந்து சுகமடைந்தார். டங்காபாடா கிராம மரியோ ஆலய சபை மூப்பர் டேவிட் சோரேன் பெரிய இருசக்கர வாகன விபத்தினின்று காப்பாற்றப்பட்டார். லோகௌ கிராம ராக்கிசால் டுடு ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து விடுபட கர்த்தர் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** படிகோலா திருச்சபையினருக்குச் சபை மூப்பரொருவர் கிடைக்க; அதிக மழையின் மத்தியிலும் நமது விசுவாசிகளுக்கு விவசாயத்தில் நஷ்டம் ஏற்படாதவாறு நல்ல அறுவடை கிடைக்க; போர்தகா, தத்தி ஆகிய கிராமங்களில் நடைபெறும் ஆலயக்கட்டுமானப்பணிகள் நன்கு நிறைவடைய; ஜோகன் முர்மு, சாகல் சோரேன், சோம் கோல், சுக்கா சோரேன் ஆகியோர் வலிப்பு நோயிலிருந்தும், திலைபாடா கிராம தானி மராண்டி மற்றும் தத்தி பகுதி ஜிபன் ஹஸ்தா மரண வியாதிப்படுக்கையிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## ராம்கார்: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** புதிதாக இரு நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை நுகர ஆரம்பித்துள்ளனர். புதிதாக 14 கிராமங்களில் சுவிசேஷ ஒளி பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது. இப்பணித்தளத்தில் விவசாயத்திற்கேற்ற நல்ல ஆசீர்வாத மழையை தேவன் கட்டளையிட்டார். நமது திருச்சபைகள் தன்னிச்சையாகவே இயங்கவும், தங்களது சுதேச ஊழியர்களின் மாதாந்திர ஊதியத்தைத் தாங்களாகவே சந்திக்கவும் தேவன் உதவிக்கரம் நீட்டி வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடும்ப எதிர்ப்புகளை முறியடிக்க மக்கள் குடும்பம் குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொள்ள; தேவனுடைய கரத்திலிருந்து அற்புத நன்மைகளைப் பெற்றிட தேவனையே நம்பிச் சார்ந்திருக்கும் நமது விசுவாசிகளுக்காக; ஆராதனைக்கு மக்கள் கூடி வருவதின் மூலம் இத்தொற்று நோய்க்கிருமி இனி பரவாமலிருக்க; நமது ஊழியத்திற்குத் தடையாக இருக்கும் குரு மற்றும் மகேந்தரின் மனந்திரும்புதலுக்காக ஜெபிப்போம்.

## *விபத்தினால் வெளிவந்த விசுவாசம்!*

*குஜராத், சாத்புரா பணித்தளம். கம்பாலா கிராமத்தில் பரத் என்பவர் நான்கு வருடமாகவே இயேசு கிறிஸ்துவைக் குறித்து தெரிந்திருந்தும், அவரைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. நமது மிஷனெரிகளும் தொடர்ந்து இவருக்குச் சுவிசேஷத்தை அறிவித்து வந்தும், இவர் இயேசுவைப் பின்பற்றுவதைக் குறித்ததான காரியத்தை நீண்ட நாட்கள் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தார். ஒருநாள் இவர் சந்தையிலிருந்து தனது வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது, கீழே விழுந்ததில் காயங்கள் ஏற்பட்டு முழுமையாக வாய்ப்பேச முடியாமல் போனது. எனவே, தனக்காக வந்து ஜெபிக்கும்படி இவர் உடனடியாக மிஷனெரிகளுக்கு இச்செய்தியை அனுப்பினார். இந்தச் செய்தியினை அறிந்த நமது மிஷனெரிகள் இவருக்காக ஜெபித்தனர், மிஷனெரிகளின் ஜெபம் கேட்கப்பட்டது. பின்பு இவர் முழுவதுமாகச் சுகமடைந்து, தனது விசுவாசத்தை வாய்த்திறந்து இயேசுகிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட்டார். அல்லேலூயா!*

ஆகஸ்ட்
14
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சார்லஸ் செல்லகுமார்
திரு. துருபராஜ் பெபர்தா

## தம்னி :
**ஜாண்பால் ஹாரிஸ் &**
**விமலா டெய்சி**

**துதிக்க:** பெடுபூரா கிராமத்தில் புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். தனது வீட்டுக்கூரையின் மேலிருந்து கீழே விழுந்து தலையில் அடிப்பட்ட போதும் உயிர்ச்சேதம் ஏதுமின்றி புஸ்ருகுடியா கிராம மிச்செல் மால்தோ காப்பாற்றப்பட்டார். கடிமாக்கோ கிராம விமலா மால்தோ மனநோயிலிருந்து சுகமடைந்தார். முத்தேரி கிராம வினோத் மால்தோ சுவிசேஷத்தின் மீது அதிக வாஞ்சை காட்டுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறு ஆராதனைக்கு வர மனதில்லாமலும், பிற விசுவாசிகளுடன் ஐக்கியம் கொள்ள விருப்பமில்லா மலும் இருக்கும் தோனிகோடா கிராம தேவதாஸ் மால்தோ, குட்டம்மு கிராம சுனில் மால்தோ, மத்தியாஸ் மால்தோ, பர்னபாஸ் மால்தோ மற்றும் ரூபன் மால் தோவிற்காக; நமது விசுவாசிகளைத் தொந்தரவு செய்யும் தண்டிகுடியா கிராம ஜோக்லா மால்தோ, தர்மா மால்தோ, பரமேஷ்வர் மால்தோவிற்காக; பெடு பூரா கிராமத்திலுள்ள நமது புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக் காக; இந்த மழைக்காலத்தில் விவசாயப்பணியில் ஈடுபடும் நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும், அவர்களது கைகளின் பிரயாசங்களைக் கர்த்தர் கனப்படுத்தவும் ஜெபிப்போம்.

## இரட்டை மீட்பு!

*மத்தியப்பிரதேசம், நேப்பாநகர் பணித் தளம். துக்கய்தாட் கிராமத்தில் விஷ்ராம் என்ற ஓயாத குடிகாரர், தனது குடும்பத் தாரோடும் சுற்றத்தாரோடும் சமாதான மின்றி வாழ்ந்து வந்தார். இவர் எப்பொழுதும் பிரச்சனைக்குரியவராகவே காணப்படுவதால், மக்கள் இவரை ஒதுக்கி வைத்தனர். இச்சூழ்நிலையில் குடிகாரராகிய இவரைப் பிசாசு ஆட்கொண்டு, அலைக்கழிக்கத் தொடங்கியது. தனது சரீரத்தில் ஏதோ ஒன்று ஊர்ந்து செல்வது போல் இவர் உணர்வதோடு, தனது முகத்தில் யாரோ ஒருவர் ஓங்கி குத்துவது போலவும் உணர்ந்தார். இவரது முகமும் வீக்க மடைந்தது. எனவே, இவர் மந்திரவாதி களை அணுகி தன்னைக் குணப்படுத்தி காப்பாற்றும்படி கேட்டார். எந்த மந்திரவாதி களாலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. பின்பு யாரோ ஒருவர் மூலமாக துக்கய்தாட் கிராம சபை மூப்பரைக் குறித்து கேள்விப் பட்டு, அவரிடம் சென்றுத் தனது சோகக் காரியங்களை விளக்கி, தன்னை இந்தப் பெரும் ஆபத்திலிருந்து எப்படியாவது காப்பாற்றுமாறு வேண்டினார். எனவே சபை மூப்பர் பன்வார்சிங் இயேசுவின் நற் செய்தியை இவருக்குப் பகர்ந்து, இவருக்காக ஜெபித்தார். உடனே குடிகாரராகிய விஷ்ராம், தனது குடிப்பழக்கத்திலிருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும் விடுதலை பெற்று நல்ல குடிமகனாக மாறினார். இவர் தற்போது நமது ஜெபக்கூட்டங்களில் தவறாமல் தனது குடும்பத்தினரோடு வந்து கலந்து கொள்கின்றார். அல்லேலூயா!*

## ஆகஸ்ட் 15 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹெப்சிபா சாமுவேல்
திருமதி. ஜான்சி ராணி ராபின்சன்
திருமதி. மேக்தலின் கிரேஸ் ஐசக் ராஜா
திருமதி. துலந்தி ரியாங் நாபா சிங்

### மால்தோ வாலிபர் ஊழியம்:

**காட்வின் கிருபாகரன் & பிரபா கமலி**

**துதிக்க:** தோனிமார்கோ, கிஸோதிக்ரி, பட்டுவாடி, குட்டம்மு, தாதா பிட்டா, தாங்கட்டி, கடிமாக்கோ, பூச்குடியா மற்றும் சில கிராமங்களில் நடத்திய இயேசு திரைப்பட ஊழியம் மூலம் 359 வாலிபர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்கால வாழ்வின் தொழிலிற்கான வழிகாட்டுதல் மற்றும் எதிர்காலத்திற்கான தேவ திட்டத்தை அறிந்து புரிந்துகொள்ளுதல் ஆகியவைகளைக் குறித்ததான அரை நாள் நிகழ்ச்சி கூடுகையொன்றில் 30 மாணவர்கள் கலந்துகொள்ள தேவன் கிருபை காட்டினார். மரம் நடுதல், கால்நடை பிராணிகளை வளர்த்தல் மற்றும் சில வாழ்வாதாரத் தொழில்களைத் தொடங்க அவர்களை ஊக்குவிக்க தேவன் ஈந்த பெலனிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** "கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு" என்ற சுவிசேஷ கைப்பிரதியை அச்சிடுவதற்கான பொருட்தேவையும் பணத் தேவையும் சந்திக்கப்படவும், அக்கைப் பிரதிகள் அச்சிடப்பட்டப்பின், அதனைக் கொண்டு 2000 மால்தோ வாலிபர்களைத் தனித்தாள் ஊழியம் மூலம் கிறிஸ்துவண்டை வழிநடத்தத் தீர்மானித்திருக்கும் திட்டம் முழுமையாக வாய்க்கப்படவும்; நமது சுவிசேஷ ரத ஊழியர் சார்லஸின் மனைவி சுசிலா மால்தோவிற்குச் சுகப்பிரசவம் நேரிட; ஊரடங்கிற்குப்பின் நடைபெறப்போகும் ஊழியங்களுக்குத் தகுந்த தேவ ஞானமும் வழிநடத்துதலும் நமது ஊழியர்களுக்குத் தேவனால் அருளப்படவும், அதிலும் குறிப்பாக 15 மாதங்களாகத் தங்களது கல்வியில் பெரும் இடைவெளியைக் கண்டும், கல்வித்தேர்வுகள் பலமுறை தள்ளிப் போடப்பட்டதாலும் ரத்து செய்யப்பட்டதாலும் கல்வி மீதுள்ள ஆர்வம் இழந்தும், அதனால் சிலர் திருமணமாகி கல்வியைத் தொடர இயலாமல் போய் விட்ட சூழ்நிலையிலும் காணப்படுவதினால் அவர்களது மனநிலைக்குத் தகுந்தவாறு நல் ஆலோசனைகளை அவர்களுக்குத் தேவ ஞானத்துடனும், அறிவுடனும், புத்தியுடனும் தெளிவாய்க் கொடுக்கவும்; தங்களது நிலங்களிலேயே 300-க்கும் மேற்பட்ட மரங்களை நட்டு, அதன்மூலம் வாழ்வாதாரத் தொழிலிற்கென இடம்பெயரும் சூழ்நிலையைத் தவிர்க்க முற்படும் 20 வாலிபத்தலைவர்களின் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், கிராமங்களில் வாலிபர் ஐக்கியம் இதன்மூலம் ஸ்திரப்படவும்; இம்மரம் நடும் தொழிலில் தங்களது மண்வளத்திற்கேற்ப சரியான விளைச்சல் தரும் மரங்களை இவர்கள் தேர்ந்தெடுக்கவும், அதை வளர்ப்பதற்கான காரியங்களில் சரியாகச் செயல்படவும் தேவன் நல்ஞானம் தர ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
16
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. மேரி செபாஸ்டின்

## மண்ட்ரோ:
### மிர்ஜியோ கிஸ்கு & செலினா ஹன்ஸ்தக்

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. ஜெபத்தின் மூலம் தொலைந்துபோன தனது ஒரு ஜோடி எருதுகளைப் பிரான் ஸிஸ் ஹெம்ரோம் திரும்ப கிடைக்கப் பெற்றார். மார்பகக் கட்டியிலிருந்து நமது சுதேச ஊழியரின் மனைவி ரேஷ்மி ஹெம்ரோமிற்குப் பூரண சுகம் கிடைத்தது. வெள்ளத்தினால் தங்களது வீடுகளை இழந்து தவிக்கும் ஃபுல்பரியா, முக்குசோக், கம்ப்ரா ஆகிய கிராமங்களில் வாழும் நமது அனைத்து விசுவாசிகளுக்கும் அரசாங்கத் திட்டத்தின் கீழ் மீண்டும் வீட்டுமனை கட்டித்தரும் அரசாங்க உதவி கிடைத்தி ருக்கிறது. மராங்குரி டுடுவைப் பக்கவாதத்தி லிருந்தும், பாரெடி கிராம பாகா சோரேனை மூளை மலேரியாவிலிருந்தும் தேவன் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகள் அனை வரும் கிறிஸ்துவில் தாங்கள் நன்கு வளர, தங்களது குடும்பங்களில் தவறாமல் குடும்பஜெபம் செய்யும் பழக்கத்தைக் கைக்கொள்ள; வேதாகம வகுப்புக்குழுக்களை நடத்தச் சரியான ஆவிக்குரிய தலைவர்கள் கிடைக்க; பனைமரத்தின் மேலிருந்து கீழே விழுந்ததினால் கையெலும்புகள் முறிந்துக் காணப்படும் பிட்டா முர்மு விரைவில் பூரண சுகமடைய; நமது விசுவாசிகளை உபத்திரவத்திற்குட்படுத்தும் காதுப் மராண்டி மனந்திரும்ப; மகுவாடி, சோன்பூர் மற்றும் ஜதுகிட்டா கிராமங்களில் நடத்தப்போகும் வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துத் தர; ஹரியாலா கிராம ஆலயக்கட்டுமானப்பணி துரித மாகச் சிறப்புடன் நிறைவடைய ஜெபிப்போம்.

## சந்தால் சீஷத்துவப்பயிற்சி ஊழியம் – சோட்டாகக்கிரி:
### சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** நமது சபை மூப்பரான சோனா லால் நெஞ்செலும்பு முறிவிலிருந்தும், அனிஷா சிறுநீரகக்கல் பிரச்சனை யிலிருந்தும் சுகமடைந்துள்ளனர். வேதாகம வகுப்புக்குழுக்களை 5 பணித்தளங்களில் ஆரம்பிக்க தேவன் வாய்ப்பருளியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பணித்தள விஜயத்திற்கு வரும் வாலிபப் பெண் பிள்ளைகள் வருங்காலத்தில் ஊழியர்களாக மாறு வதற்குத் தங்களை தேவனின் கரத்தில் அர்ப்பணிக்க; எல்லாத் திருச் சபைகளிலும் சிறுவர்களுக்கென ஞாயிறு வேதாகமப்பள்ளி வகுப்புகளும், வாலிபர்கள் மற்றும் பெரியவர்களுக்கென வேதாகம வகுப்புகளும் தொடங்கப்பட; விசுவாசிகளல்லாதோர் மத்தியில் நமது புதிய கிறிஸ்தவ விசுவாச தம்பதிகள் பரிசுத்த ஒழுக்கத்துடன் முன்மாதிரியான வாழ்வு வாழ; குடிப்பழக்கம் மற்றும் சமுதாய தீயப்பழக்கவழக்கங்கள் யாவையும் நமது புதிய தொடர்பாளர்கள் முற்றிலுமாக விட்டு விட; வேதாகமத்தை வாசிக்கத் தெரிந்த நமது விசுவாசிகள் அநுதினமும் அதைக் கருத்துடன் வாசித்து கிறிஸ்துவில் ஆழ மாய் வளர ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்**

**17**

**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஙாய் தியான்சிங் ஹவ்செல்

## புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி, பந்தேனி :

### விக்டர் ஜெயசீலன் & பிரின்சஸ் நகோமி

**துதிக்க:** நமது லக்கிபூர் கிராம சிறுபிள்ளைகளுக்கு விடுமுறை வேதாகமப்பள்ளி நடத்தவும், நமது குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை உதவிக்கல்வி வகுப்புகள் நடத்தவும் தேவன் உதவி புரிகிறார். பள்ளியை அரசாங்கப் பதிவு செய்வதற்கான பணி நடந்துவருகிறது. இணையதள நிகழ்நிலைத் தேர்வுகளின் மூலம் நடத்தப்பட்ட B.Com., செமஸ்டரின் தேர்வுகளை ரீஸ் மால்தோ, ஜாண் மால்தோ, மார்கஸ் மால்தோ ஆகியோர் எழுதியுள்ளனர். பம்தி, தன்காரா, குமார் மஜோ ஆகிய மால்தோ கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்படவும், அக்கிராம நமது விசுவாசிகளிடையே 50 மால்தோ மொழி வேதாகமங்கள் விற்கப்படவும் தேவன் உதவி செய்த தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லக்கிபூரில் வசிக்கும் தெலி இனமக்கள் மத்தியில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; மதுரை கிரண் உயர்நிலைப்பள்ளியில் 2020-ம் ஆண்டில் 12-ம் வகுப்பு முடித்துள்ள தேவுத் கம்லா, தேவுத் குயா, சஞ்சீவ், செலத்தியேல் ஆகியோருக்குத் தகுந்த இளங்கலை கல்விப்படிப்புகளில் இடம் கிடைக்க; வலிப்பு நோயிலிருந்து ஸ்டேன்லி மால்தோவிற்குச் சுகம் கிடைக்க; பந்தேனி சிறுவர் பராமரிப்பு மையத்தில் கல்விப் பயிலும் நமது 100 பிள்ளைகளும் அருகாமையிலுள்ள தங்களது கிராமங்களிலிருந்து பந்தேனிக்கு உதவிக்கல்விக்கென கடந்து வர; நமது பந்தேனி பள்ளி வளாகத்திலே பணிபுரியும் நமது சுதேச பணியாளர்களுக்கு அடிப்படை வசதிகளோடு வீடுகள் கட்டித்தரப்பட ஜெபிப்போம்.

# மேற்கு வங்காளம்

## மால்டா:

### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பயத்தின் ஆவியிலிருந்து நமது விசுவாசி ரீனா கர்த்தரால் விடுவிக்கப்பட்டு, பெலப் படுத்தப்பட்டார். தீராத சரீர வலியினின்று மாமுனி அற்புதமாகச் சுகமடைந்தார். நமது புதிய விசுவாசிகளான பிரேம் மற்றும் ஜோகரத்லா கிறிஸ்துவில் நாளுக்குநாள் வளர்வதோடு, தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடவும் ஆயத்த மாயிருக்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுகுர் மற்றும் பிரேமின் குடும்பத்தினர்கள் இரட்சிக்கப்பட; மனோஜின் மனைவிக்கு நல்ல சுகப் பிரசவம் நிகழ; தனது வேலைக்கான பயிற்சியை நமது விசுவாசி ரூத் சர்கார் வெற்றியுடன் முடிக்க; விவசாயத்திற் கான நல்ல காலச்சூழ்நிலையையும், அறுவடையையும் கர்த்தர் அருள ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
18
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கீதா கென்னத்
திருமதி. மெல்பின் ரெஜினி சுந்தர்
திரு. அகிலேஷ் குமார்

## இட்டாஹார்:

### அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** புதிதாக 9 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷ ஒளிக்கதிர் பரவியுள்ளது. கடுமையான காது வலியிலிருந்து ராம் ஹன்ஸ்தக்கையும், மஞ்சள் காமாலையிலிருந்து பசாஹர் கிராம ஜாமுர் முர்மு, ராஜன் பஸ்கி மற்றும் பன்பூல் கிராம ஆரத்தி சோரேன், சுனி மார்தி ஆகியோரையும் தேவன் சுகப்படுத்தினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடும் போது அங்கே மெய்ச் சமாதானமும் சந்தோஷமும் நிறைவாய்க் காணப்பட; எவ்விதப் பிரச்சனையுமின்றி வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் நடைபெற; குந்தானா கிராம சஞ்ஜித் ஹன்ஸ்தக் குடற்புண் காய்ச்சல் மற்றும் இரத்தச்சோகை வியாதியிலிருந்தும், அமேதி கிராம நில்புதி முர்மு மற்றும் சாட்னிகுட்டு கிராம துலி முர்மு கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

## அஸோம்

## வடகிழக்குப் பிராந்தியம்:

### C.H. ஜாண் & வேணி

**துதிக்க:** கிறிஸ்துவின் மந்தையில் புதிதாக 17 நபர்கள் விசுவாசத்துடன் சேர்ந்துள்ளனர். லோக்ரா பணித்தளத்தில் சிறியளவிலான வேதாகம வகுப்புக் குழுக்கள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. கொச்சுவேலி கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் சிறப்பாக நிறைவேறின. மஜுலி பணித் தளத்தில் புதிய ஆராதனை மையமொன்று தொடங்கப்பட்டுள்ளது. கோகாமுக், லக்கிம்பூர், கோஹ்பூர், நாராயண்பூர் மற்றும் ஜோனை ஆகிய இடங்களில் அநேக புதிய மக்கள் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பை தேவன் அவர்களுக்கு அருளியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தின் மூலம் தனது கணவனை இழந்திருக்கும் நமது மிஷனெரியின் தாயார் கனகா பிசோயிற்கு மனஆறுதல் கிடைக்க; அதிக சவால்கள் மற்றும் சோதனைகள் மத்தியில் கிறிஸ்துவில் வளர்ந்து வரும் நமது விசுவாசிகளுக்காக; பர்த்தோமியோலி கிராம மக்கள் யாவரும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; இப்பிராந்தியத்திலுள்ள அனைத்து ஆராதனை மையங்களும் திருச்சபைகளும் கிறிஸ்துவில் ஸ்திரமாக வளர; வலிப்பு நோயிலிருந்து ராதாமணி டோலேயும், மாலைக்கண் வியாதியிலிருந்து பிரியா குலியும், சரீர பெலவீனத்திலிருந்து அயூ சங்மாயியும், புற்றுநோயிலிருந்து அஞ்சலியும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
19
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. குமாரி சூசமா ஹரமோகன்
திருமதி. சுஷ்மிதா சமரேந்திர சிங்

### கோஹ்பூர்: டென்சிங் & கவிதா

**துதிக்க:** புதிதாக 13 நபர்களின் உள்ளங்களில் இயேசு தம்மை விசுவாசிக்கும் விசுவாசத்தைத் துவங்கியுள்ளார். சொக்கோலாவில் நடந்து கொண்டிருந்த ஆலயக்கட்டுமானப்பணி நிறைவடைந்தது. கோவிட்-19னினிமித்தம் மருத்துவமனையில் சிகிட்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நமது விசுவாசிகள் அனைவரும் சுகத்துடன் தங்களது வீடுகளுக்குத் திரும்ப கர்த்தர் அநுக்கிரகம் ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரோஜாபர் பகுதியில் இத்தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்போர் யாவரும் பூரண சுகம் பெற; தங்களது கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க நமது மிஷனெரிகள் நுழையக்கூடாதென மிரட்டி வரும் மந்திரவாதி தாலிமி பெகு மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### லக்கிம்பூர்:

### ஆரோன்சிங் நர்சாரி & ரீனா

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் அடைந்துள்ளனர். போர்பந்தா கிராம மக்கள் திறந்த மனதோடு சுவிசேஷத்தைக் கேட்டிருக்கின்றனர். காசி கோட்டா மற்றும் தொர்கெய் கிராமங்களில் அதிகமான புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகி வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசி தானேஷ்வர் பெகு மீண்டும் கிறிஸ்துவுக்குள் தனது விசுவாசத்தைத் தொடர; ஆதர்குரி கிராம நமது புதிய விசுவாசிகள் தங்களது கிறிஸ்தவ விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிடவும், அதற்கு இருக்கும் தடைகள் யாவும் விலகவும்; பொடுமானி பகுதியில் சிறிய தற்காலிக ஆராதனைக்கூடமொன்று அமைக்கப்பட; போர்பந்தா தாகு பகுதியில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் விரைவில் நிறைவடைய ஜெபிப்போம்.

## சத்தீஸ்கட்

### பையாதன்:

### முத்துக்குமார் & நேத்ரவதி;
### தாங் சின் லியான் & உங் தியான்சிங்

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் பறைசாற்றப்பட்டுள்ளன. 16 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் செய்யப்பட்டுள்ளன. பாட்னா பகுதியில் செய்யப்பட்டு வந்த பணித்தள ஆய்வு சிறப்பாக முடிவுற்றது. தவறான புரிந்து கொள்ளுதலினால் பிரிந்துபோன நமது விசுவாசி துர்காவும் அவரது கணவரும் தேவ தயவின்படி மீண்டும் ஒன்றிணைந்துள்ளனர். புதிய விசுவாசிகளும், புதிய தொடர்பாளர்களும் நாம் நடத்தும் ஜெபத்தில் தவறாமல் வந்து கலந்துகொள்கிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்தை இப்பகுதியில் நன்கு திறம்படச் செய்ய சுர்குஜா மொழியை கற்றுக்கொள்வதற்கேற்ற ஞானம், அறிவு நமது மிஷனெரிகளுக்குத் தேவனால் அருளப்பட; சிறுநீர் குழாய்ப் புற்றுநோயால் அவதிப்படும் ராங்சாய் பாண்டே மற்றும் நுரையீரல் தொற்றினால் அல்லல்படும் ஹீராமணியை தேவன் குணமாக்க; கர்ரா கிராம சரத் குடிப்பழக்கத்திலிருந்து மீட்கப்பட; கோண்ட்ஸ் இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்ய நல்ல அர்ப்பணிப்புள்ள சுதேச ஊழியர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## ஆகஸ்ட் 20 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. இஸ்ரேல் டேனியல்
திரு. இம்மானுவேல் முர்மு
திருமதி. நீருபேன் சோமாபாய்

### சம்ப்பா:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். முதன்முறையாக 2 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் உரைக்கப்பட்டுள்ளன. குழந்தை செல்வங்கள் இல்லாமல் இருந்த நமது விசுவாசிகளான தொங்காகோஹ்ரத் கிராம தீப் மாலா, சந்தோஷி & குட்டி, ரேகா & பர்மோத் பன்சாரி ஆகியோருக்கு தேவன் கிருபையாய் அப்பாக்கியத்தை நல்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிமாரியா மற்றும் சோனே ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட நிலங்கள் முறைப்படி பதிவுச் செய்யப்பட; காம்ரியா கிராமத்திலுள்ள சாத்னமி இனமக்கள் கூட்டத்தின் இரட்சிப்பிற்காக; புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் தொடர்ந்து கிறிஸ்துவில் வளர; ஸ்ரீராம் காந்தே பக்கவாதத்திலிருந்தும், கிஷோரா கிராம ரமேஷ் திவாகர் குடற்புண் காய்ச்சலிலிருந்தும் சுகம் பெற; சாத்னமி மக்களிடையே ஊழியம் செய்ய இரண்டு சுதேச ஊழியர்கள் கிடைக்க; நமது புதிய தொடர்பாளர்கள் குடிப்பழக்கத்திலிருந்து மீள ஜெபிப்போம்.

### கர்கோடா:

### கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. காஞ்சன்பூர் கிராமத்தில் முதன்முறையாகப் பஜன் கூடுகைகளைத் துவங்க தேவன் நமது மிஷனெரிகளுக்கு உதவி செய்துள்ளார். ராய்காட் மாவட்டத்தில் ஊரடங்கிற்குப் பின் நமது அனைத்து ஊழியச்செயல் பாடுகளையும் மீண்டும் தொடங்க தேவன் அநுக்கிரகம் ஈந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரத்தியா மக்களினத்தின் இரட்சிப்பிற்காக; சோஹ்ரான், சாரதி மற்றும் சாகு இனமக்கள் கூட்டத்திலிருக்கும் அதிக கிறிஸ்தவ விசுவாசிகளின் மத்தியிலிருந்து அநேக உள்ளூர் சுதேச ஊழியர்கள் கர்த்தருடைய பணிக்கென எழும்ப; சாட்டிகோடா கிராம நமது விசுவாசி ஜெகத்ராம் சாரதியின் மகளுடைய திருமணம் கிறிஸ்தவ முறையில் நடத்தப்படுவதற்கு அவர்களது உறவினர்கள் மத்தியிலிருந்து கடும் எதிர்ப்புகள் நிலவுவதால், அத்திருமணம் தடையின்றி தேவப்பாதுகாவலோடு நடைபெற ஜெபிப்போம்.

## கடினமான இடத்திலும் ஊடுருவிச் செல்லும் கர்த்தரின் சுவிசேஷம்!

*உத்தரகாண்ட், பஸ்பூர் பணித்தளம். ஹர்வாரா காஷ் கிராம மக்கள் யாவருமே சூதாட்டம், புகை பிடித்தல், போதை பொருட்கள் உட்கொள்ளுதல், அதிகப்பட்ச ஒழுக்கக்கேடு, களவு, அடிதடி, குரு வணக்கம் போன்ற காரியங்களுக்குப் பெயர் போனவர்கள். இவர்கள் சுவிசேஷத்தைக் கடுமையாக எதிர்ப்பதினால், இக்கிராமத்திற்குச் சுவிசேஷம் அறிவிக்க நமது ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகள் யாவும் எப்பொழுதும் வீணாகிப் போகும். ஆயினும், நமது ஊழியர்கள் இக்கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட தொடர்ந்து ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தனர். அந்த ஜெபங்களைக் கேட்ட தேவன், தமது ஏற்றவேளையில் சுமன் என்ற பெண்மணியின் வாழ்வைத் தொட்டு, அவர் மூலம் அக்கிராமத்திலுள்ள அநேகருக்கு இயேசுவின் அன்பை அறியப் பண்ணினார். அல்லேலூயா! இக்கிராம மக்கள் அனைவரும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.*

## ஆகஸ்ட் 21 சனி

### காட்கோரா:
**டிட்டிங்பௌ & மலங்மெய் சனாலுங்; வால்வி தினா தானா & ஷைலா**

**துதிக்க:** சுவிசேஷ வார்த்தைகளால் புதிதாக 19 கிராமங்கள் சந்திக்கப் பட்டுள்ளன. ஜம்ரி, ஜுவானி, டோலா ஆகிய கிராமங்களில் புதிதாகப் பஜன் கூடுகைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பங்கேதா கிராமத்தில் நடைபெற்ற பெரியவர்கள் கூடுகையையும், பஜன் கூடுகைகளையும் தேவன் பற்பலவிதங்களில் ஆசீர்வதித்துத் தந்தார். பர்னுஜஹாரியா ஆலயத்தில் வைத்து இரண்டு திருமணங்கள் கிறிஸ்தவ முறையில் நடத்த தேவன் உதவி செய்தார். பிறவியிலேயே கண்ணிமைகள் மூடப்பட்ட நிலையி லிருந்த பாலா பச்ரா கிராம சோனல் பட்டேலை தேவன் பூரணமாகக் குண மாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆராதனைக்கு வரவிடாமல் தடுக்கும் நமது விசுவாசிகளான செமார் சிங் மற்றும் ஜீன்குமாரின் பெற்றோர்கள் இயேசுவின் அன்பை ருசிக்க; செமார்தேவி மற்றும் கட்டேல் டோலாவில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டும் விஜய் சிங் & சந்தோஷின் குடும்பத்திற்காக; சாலவா கிராம மக்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; நமது ஊழியத்தை எதிர்க்கும் மோகன்பால், ராஜ்குமார், மத்வா சிங்கின் மனமாற்றத் திற்காக; கல்லீரல் பிரச்சனையிலிருந்து நமது சுதேச ஊழியர் ஃபிலான்சாய் குணமடைய; நமது ஆராதனைக்குத் தொடர்ச்சியாக வரும் துமான் பகுதி தெபோத்தின் ஆவிக்குரிய நல்வளர்ச்சிக் காக ஜெபிப்போம்.

### லக்கன்பூர் & அம்பிகாபூர்:
**அருண் குமார் & சாரதி**

**துதிக்க:** லக்கன்பூரிலிருந்தும் கோசுங் காவிலிருந்தும் 4 நபர்கள் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சுரா மற்றும் கொய்ரோவில் புதிதாக ஆராதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ராஜ்பூர் மற்றும் தாமோத்பூரில் உண்டான எதிர்ப்புகள் ஜெபத்தின் மூலம் மறைய தேவன் கிருபை புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விரைவில் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை யிடப்போகும் சமேரா மற்றும் அம்பிகா பூரைச் சார்ந்த நமது 10 புதிய தொடர் பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக் காக; ராஜா சௌகானை வலிப்பு நோயி லிருந்தும், அம்பிகாபூரின் விஜய் எக்காவைச் சிறுநீரகப் பிரச்சனை யிலிருந்தும் தேவன் சுகமாக்க; சமேரா கிராம அமர்லால் மற்றும் சிவ்சாந்தின் குடும்பங்கள் மழலை செல்வங்களால் ஆசீர்வதிக்கப்பட; நமது சுதேச ஊழியர் தேவ்நாத்திற்கு நீரிழிவு நோயிலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்**
**22**
ஞாயிறு

## லுடேக்: டேவிட் மசிஹ் & நிஷா டேவிட்

**துதிக்க:** முதல்முறையாக 2 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். நமது விசுவாசி புதன்சாய் லோக்ராவைப் பாம்புக்கடியினின்று தேவன் காப்பாற்றினார். சிவபூர் மற்றும் கோப்கியாகர் திருச்சபைகளுக்குப் புதிய தொடர்பாளர்கள் தவறாமல் வருகை தருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதன் திகாவை மலேரியாவிலிருந்தும், பிக்கினியை வலிப்பு நோயிலிருந்தும், தீபிகா காஜுரைக் காசநோயிலிருந்தும் தேவன் சுகமடையச் செய்ய; சந்தோஷின் குடும்பத்திற்கு மழலை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

## பாலி: ராபின்சன் ஹஸ்தக் & ஜான்சி

**துதிக்க:** கோராமரி மற்றும் தக்டோயா கிராமங்களில் புதிதாகப் பஜன் கூடுகைகள் துவங்கப்பட்டுள்ளன. கோராமரி கிராம ராமதார் பர்த்வாஜின் குடும்பம் கிரமமாகப் பஜன் கூடுகையை நடத்தவும், தக்டோயா கிராம அமர்சிங் ஆராதனையை நடத்தவும் தங்களது இல்லங்களைத் திறந்து கொடுத்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோராமரி கிராமத்தில் தங்களது இல்லத்தை ஆராதனைக்கென திறந்துக் கொடுத்துள்ள ராமதார் பர்த்வாஜின் குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட; தனது பிற நண்பர்களோடு இணைந்து கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய ஆயத்தமாகும் தக்டோயா கிராம அமர்சிங் குடும்பத்தின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; அமர்பூர் கிராம மனிஷா, சந்தோஷா, ராம்குமாரி, மாங்கினி, மோஹித் ராம், அர்ஜோ ராம், ரேவதி, சாவனா, தஸ்மத்பாய் மற்றும் சில்லி கிராம மோஹித் ராம், அவரது மனைவி, பிரகாஷ் சாந்த், அவரது மனைவி யாவரும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை விரைவில் அறிக்கையிட்டுத் திருச்சபையில் இணைய; மஜ்கோன் கிராமத்திலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; பின்மாற்றமடைந்துள்ள நமது குடியா திருச்சபை விசுவாசிகளான ராம்குமார், கணேஷ் ஆகிய இருவரும் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர ஜெபிப்போம்.

## சீத்தாபூர்: பத்வி சோமாலியா & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** புதிதாக 14 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். 5 கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் நற்செய்தி கொடுக்கப்பட்டுள்ளது. நௌபாராவில் 24 மணி நேர உபவாச ஜெபம் தொடங்கப்பட்டுள்ளது. சுசிலாவைப் பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரங்காபாரா பகுதியில் வாழும் நமது பின்மாற்றமடைந்துள்ள விசுவாசிகள் மீண்டும் கிருபையாய் விசுவாச வாழ்வைத் தொடங்க; விஜய்பாரா பகுதியில் பஜன் கூடுகைகள் நடத்தப் பிரயாசப்படும் திட்டங்கள் செயலாக்கம் பெற; விபத்தினால் மிகக் கொடிய காயங்களுக்கு ஆளாகியிருக்கும் ஓதாம் கெல்லா பகுதி இஸ்மாயில் & டிங்கியின் ஜீவனை தேவன் காப்பாற்றித் தர; ஜாய்முனியை நெஞ்சு வலியிலிருந்தும், சகுந்தலாவைச் சரீர வீக்கத்திலிருந்தும் தேவன் சுகமாக்க; திருடு போன நமது விசுவாசி ஜெய்னாமின் இருசக்கர வாகனம் மீண்டும் கிடைக்க ஜெபிப்போம்.

## ஆகஸ்ட் 23 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரமாமுனி JBV பிரசாத், திரு. வெங்கடேஷ் வடார்
திரு. ஆஷிஷ் குமார், செல்வி. சுபாசினி முர்மு

### பாண்டே:

**பாபுஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா**

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவின் சிலுவையண்டையில் வந்து சேர்ந்துள்ளனர். ஒரு கிராமம் முதன்முறையாகச் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. ஊரடங்கிற்குப் பிறகு ஆராதனைகள், வேதாகம வகுப்புகள் மற்றும் இதர ஊழியப்பணிகள் யாவும் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன. குடற்புண் காய்ச்சலிலிருந்தும், மலேரியாவிலிருந்தும் தேவன் யாகூப்பின் குடும்பத்தைக் காப்பாற்றி சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிஸ்கு கோவாச்சியின் குடும்பத்தில் தேவ சமாதானம் பிறக்க; பாண்டு நோரதி, மீரா முன்னா, பிர்ஜு கட்லாமி, ஜோகாராம் கோவாச்சி ஆகியோரின் குடும்பங்கள் யாவும் தேவ இரட்சிப்புப் பெற; புற்றுநோயினால் கஷ்டப்படும் சாது நோரதி பூரண ஆரோக்கியம் பெற ஜெபிப்போம்.

## ஒடிசா

### ராய்ரங்பூர்: சாமுவேல் J. & ஹவிலா பரமானந்த்

**துதிக்க:** கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்திற்குள் புதிதாக 14 நபர்கள் வந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷ வாசனையை மக்கள் நுகரத் துவங்கியுள்ளனர். கோவிட்-19னிலிருந்து தேவன் குலியா சோரேன் குடும்பம், சோமாரா டுடு, லகி சோரேன், சாய் குடும்பம் ஆகியோரைக் குணப்படுத்தியுள்ளார். பிசாசின் தாக்குதலிலிருந்து ராமசந்திரன் பூர்த்தியை தேவன் விடுவித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களுக்கு அருமையானவர்களை இழக்கக் கொடுத்து தவிக்கும் நமது ராய்ரங்பூர் பணித்தள திருச்சபையைச் சார்ந்த குடும்ப மக்களுக்குத் தேவன் தமது ஆறுதலையும் தேறுதலையும் தந்து பெலப்படுத்த; ராஜு போத்ராவைப் புற்றுநோயிலிருந்தும், பய்ரா ஹஸ்தா மற்றும் தாசாவை இனம்புரியாத நோய்களிலிருந்தும், கிரி சந்திர பூர்த்தியைப் பக்கவாதத்திலிருந்தும் தேவன் குணமடையச் செய்ய; விசுவாசத்தில் பின்தங்கியுள்ள நமது விசுவாசிகளான பதி, சாங்கு, பிங்கு ஹெம்ரோம், லக்ஷ்மி சோரேன், பூச்சன் டுடு ஆகியோர் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர ஜெபிப்போம்.

## குஜராத்

### பாஜிபுரா:

**மார்கஸ் மால்தோ & சாரா மார்கஸ்**

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளார். பிசாசுகளின் பிடிகளிலிருந்து பயலையும், போதை பொருட்களுக்கு அடிமையாகியிருந்த நமது புதிய தொடர்பாளர்களான அத்துல் மற்றும் பகதூரையும் கர்த்தர் விடுவித்தார். கோவிட்-19னிலிருந்து தேவன் நமது தன்னார்வ ஊழியர் ஜனாவைச் சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது தரியாவாரா கிராம விசுவாசிகள் சகோதர ஐக்கியத்திலும் ஒற்றுமையிலும் வளர்ந்து கிரமமாக ஜெபக்குழுக்களில் பங்கேற்க; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் யாவரும் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; சங்கிலித்தொடர் ஜெபமும், வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளும் தடையின்றி சுமூகமாக நடைபெற ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
24
செவ்வாய்

### பாவ்நகர்: கரோடா பிஸ்வா ரஞ்சன் & பிரபினா ராணி

**துதிக்க:** சுவிசேஷ எதிர்ப்பாளர் கஜோல் பேன் மனந்திரும்பி, நம்முடன் நமது ஜெபங்களில் வந்து கலந்துகொள்கிறார். கொடிய காய்ச்சலிலிருந்து கமலேஷ் மற்றும் அவரது மகன் அனில்பாயை தேவன் சுகப்படுத்தினார். நமது புலம் பெயரும் விசுவாசிகள் ஊரடங்கிற்குப்பின், தற்போது மீண்டும் தங்களது பணியிடங் களுக்குச் சுகமாய்ச் சென்றுச்சேர தேவன் கிருபை பாராட்டியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதினால் தங்களது சொந்த குடும்பத்தினரால் எதிர்ப்பைச் சந்திக்கும் நமது விசுவாசிகளான சீத்தால்பேன் மற்றும் பால்குனிபேனுக்காக; மித்தால் பேனின் மகன் மனந்திரும்பி இரட்சிக் கப்பட; கீதாபேன் & பிரஜாபதியின் குடும்பத்தில் தேவ சமாதானம் உண்டாக; நமது விசுவாசி கிரிபாலிக்கு நல்ல வாழ்க்கைதுணையமைய; நமது புதிய தொடர்பாளர் ஜித்துபாய் பட்டேலின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### நஸ்வாடி: யுவனேஷ் & ஜான்சி ராணி

**துதிக்க:** இங்குள்ள 4 திருச்சபைகளில் தினமும் ஒருமணிநேர கூட்டுஜெபத்தைத் தொடங்க தேவன் ஒத்தாசை நல்கினார். சிறுநீர் தொற்றுக்கிருமி பிரச்சனையினால் அவதிப்பட்ட ஜெரேமியாபாயைக் கர்த்தர் குணமாக்கினார். விவசாயத்திற்கான நல்ல மழையை தேவன் கட்டளையிட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டுங்ராபில் மக்களினத்தின் வாழ்வில் முழுமாற்றம் பிறக்க; புலம் பெயர்ந்துச் செல்லும் நமது விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள; டுங்ராபில் மக்கள் மத்தியில் காணப்படும் தற்கொலையின் ஆவிகள் விரட்டப்பட ஜெபிப்போம்.

### ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி: அல்போன்ஸ் & ஷைனி சினேகா

**துதிக்க:** நமது பள்ளியில் தற்போது 10-ம் &12-ம் வகுப்புகளில் படித்து முடித்தப் பிள்ளைகளின் மதிப்பெண்களைச் சரியாய்க் கணக்கிட்டு, அவைகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்க தேவன் நமது பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கிருபை செய்தார். நமது ஊழியர்களின் எல்லாப் பிரயாணப்பாதைகளிலும் கர்த்தருடைய பாதுகாவல் நிறைவாய் இருந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது அருமையான பெற்றோர்களை இந்தத் தொற்றுநோய்க் காலங்களில் இழந்து நிற்கும் அன்புப் பிள்ளைகளுக்காக; இன்னும் அநேக பிள்ளைகள் நமது பள்ளியில் வந்து சேரவும், அவர்களது வாழ்வின் கல்வித் தரமும் ஆவிக்குரிய தரமும் மேம்படவும்; 12-ம் வகுப்பு முடித்திருக்கும் நமது பள்ளிப் பிள்ளைகளுக்கு உயர்கல்விக்கான படிப்புத்துறைகளில் தகுந்த இடங்கள் கிடைக்க; நமது பிள்ளைகளைக் கல்வி யிலும், ஆவிக்குரிய காரியங்களிலும் சரியாய் நடத்துவதற்கு ஏற்ற ஞானமும், ஆலோசனைகளும் பரத்திலிருந்து ஆசிரியர்களுக்குக் கிடைக்க; இணையதள நிகழ்நிலை வகுப்புகளுக்கான இணைப்பு பள்ளி வளாகத்திலும், பக்கத்து கிராமங் களிலும் தெளிவாய் இருக்க ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
25
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எஸ்தர் ஆபிரகாம்

திரு. சத்தியப்பா

## தப்தி: மாதவராய் & ஜெபதங்கம்

**துதிக்க:** ஊரடங்கின் மத்தியிலும் 75 புதிய நபர்களுக்குக் கைபேசி மூலம் சுவிசேஷம் சொல்ல தேவன் நமது ஊழியர்களுக்கு உதவி செய்தார். கர்த்தர் அமர்சிங்பாயின் சுகவீனத்தில் அவருக்குச் சுகமருளியதின் விளைவாக அநேக குடும்பங்கள் புதிதாக நமது ஆராதனையில் வந்து கலந்துகொள்ள ஆரம்பித்துள்ளனர். இணையதள வசதிகளுடன் கூடிய கைபேசி அழைப்புகளின் மூலம் நமது விசுவாசிகளுக்குத் தினமும் காலை மாலைதோறும் ஜெபக்கூட்டங்கள் நடத்திட தேவன் பாராட்டிய நன்மைகளுக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாழ்வாதாரத் தேவைகளை முன்னிட்டு, நமது விசுவாசிகள் முன்பு வேலை செய்துகொண்டிருந்த நிறுவனங்கள் மீண்டும் துரிதமாகத் திறக்கப்பட; கருப்பு பூஞ்சை நோயிலிருந்து அனுஜாபேனிற்கு அற்புத சுகம் கிடைக்க; வசந்த்பாயின் மகளிற்குத் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்க; ஆலயங்கள் கட்டப்பட நல்ல நிலங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## சாத்புடா பிராந்தியம்:
### ஜோசப் துரைராஜ் & எலிசபெத்

**துதிக்க:** ஒருநபர் புதிதாக இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளார். முதன்முறையாக 6 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அளிக்கப்பட்டுள்ளது. தர்சாடி கிராமத்தில் வைத்து நடைபெறும் மாலைநேர ஜெபக்கூடுகைகளில் அநேகர் பங்குப் பெறுகின்றனர். நமது உள்ளூர் சுதேச ஊழியர் அசோக்பாய் பெரும் விபத்தினின்று காப்பாற்றப்பட்டார். விசுவாசிகளின் உபவாச ஜெபத்தினால் 6 பெண்களும் 2 ஆண்களும் பிசாசின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசி பரத்பாயின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; இந்த ஊரடங்கின்போது குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்திட; ஊரடங்கின்போது வேலைகளை இழந்ததினால், பெரும் பொருளாதாரச் சிக்கலில் சிக்கி வாடும் நமது விசுவாசிகளின் தேவைகள் யாவும் சந்திக்கப்பட; குந்தி மற்றும் பத்தல்தேவி கிராமங்களில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் அனைத்தும் சிறப்பாக நிறைவு பெற ஜெபிப்போம்.

## ஜெபம் ஏற்படுத்திய அசைவு!

*உத்தரகாண்ட், மல்தன்சோர் பணித்தளம். நமது விசுவாசி ராதிகாவின் மூத்த இருகுழந்தைகளும் கருவிலேயே மரித்துப் போயின. தற்போது மூன்றாவதாக கருவுற்றிருக்கும் அவரின் கர்ப்பப்பையில் இருக்கும் கருவும் திடீரென அசைவற்றுக் காணப்பட்டதால், அவர் நமது ஊழியர்களை அழைத்து அவருக்காக ஜெபிக்கக் கூறினார். ஊழியர்களும் ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன், அற்புதத்தைக் காணச் செய்தார். அந்த ஜெபம் நிறைவுற்றதும், அசையாதிருந்த கரு மீண்டும் அசைவதை ராதிகா உணரத் தொடங்கினார். தேவனுக்கே புகழ்! தயைகூர்ந்து அவருடைய சுகப்பிரசவத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.*

ஆகஸ்ட்
**26**
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சிந்து கோரா எட்வின்

## தாத்ரா மற்றும் நகர் ஹவேலி

### கான்வேல்:

**P. வினு & சுகிமலர்**

**துதிக்க:** இயேசுகிறிஸ்துவைக் குறித்த தான விசுவாசம் புதிதாக 5 குடும்பங்களைப் பற்றிப்பிடித்துள்ளது. கோச்சை கிராம மகேஷ்பாயிற்குத் தனது தாத்தாவின் அடக்க ஆராதனையைக் கிறிஸ்தவ முறையில் நடத்த தேவன் உதவி புரிந்தார். நமது விசுவாசிகளில் அதிகமானோர் கோவிட்-19னால் பாதிக்கப்பட்டபோதிலும், கர்த்தர் எவரையும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கவில்லை. லுக்கேரி கிராம நமது விசுவாசி பிரபுபாய் பெரிய விபத்தினின்று ஜெபத்தின் வாயிலாக காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோச்சை கிராம ரஷ்மிபேன், மந்தோனி கிராம தேவ்ஜிபாய் ஆகியோருக்குச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், சுராங்கி கிராம சினுபேனிற்கு நெஞ்சு வலியிலிருந்தும், சிஸ்தா கிராம ரத்தன்பாயிற்குப் பக்கவாதத்திலிருந்தும், காசிராமிற்குத் தீராத பெலவீனத்திலிருந்தும், தர்மாபாயிற்கு மூட்டு வலியிலிருந்தும் தேவன் சுகமருள; கோவிட்-19னால் ஏற்பட்ட பக்கவிளைவு பெலவீனங்களினால் அல்லல்படும் நமது விசுவாசிகளுக்காக ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### போரடி:

**ஓம்பிரகாஷ் & சப்னா**

**துதிக்க:** குரியாபானி கிராமத்தில் புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷ ஒளி ஏற்றப்பட்டுள்ளது. சாஜகர்பாடா, கேவ்சிபாடா, புதக் விகிர், பிப்பாரிபாத், குரியாபானி, தபசியா, போரடி ஆகிய கிராமங்களில் வேதாகம வகுப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. விகலபாடா, மஜானி, ஃபத்தேஹ்பூர், சாக்காடு, அம்பாடுக் ஆகிய இடங்களில் நடந்த ஊழியப்பின்தொடர்பணிகளை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். தம்மாபாடா ஃபாலியா கிராமத்தில் ஒரு புதிய ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காதர்தேவ் கிராம தஸ்ராத் பாயைக் காது கேளாமையிலிருந்தும், குரியாபானி கிராம அம்பராபாயைப் பக்கவாதத்திலிருந்தும், புதக் விகிர் கிராம பாஸ்கர்பாயை மனநோயிலிருந்தும், நியூ போரடி கிராம சஞ்சயைச் சூதாட்டப்பழக்கத்திலிருந்தும், காதர்தேவ் கிராம கோரிபாயை நெஞ்சு வலியிலிருந்தும், வாகபாடா கிராம மகிமாபாயைச் சரீரக்கட்டியிலிருந்தும் தேவன் குணப்படுத்த; அபாசிங்பாடா கிராம ராஜாராம்பாயைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்**
**27**
**வெள்ளி**

## டெக்கான் பிராந்தியம்:
### விஜயன் & ஜெபரோஸ்

**துதிக்க:** புதிதாக 6 நபர்கள் கிறிஸ்து வண்டை விசுவாசத்துடன் நெருங்கி யுள்ளனர். விசுவாசிகளுக்கென்று சிறப்பு முகாம்களையும், குழந்தைகளுக்கென்று விடுமுறை வேதாகமப்பள்ளி வகுப்பு களையும், ஊழியர்கள் அனைவருக்கும் 12 மணிநேர ஜெபத்தையும் நல்ல முறையில் நடத்தி முடிக்க தேவன் உதவிக்கரம் நீட்டினார். அசிஃபாபாத் பணித்தளத்திலுள்ள பர்திகுடா கிராமத்தினர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றனர். ஆலப்பள்ளி மற்றும் எட்டப்பள்ளி பணித்தளங்களிலுள்ள தபா மற்றும் இர்பனார் ஆகிய இடங்களில் புதிய வெளிசந்திப்பு ஊழிய மையங்கள் திறக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கல்லணை கட்டும் திட்டத் தினால் வெகு கிராமங்களைக் காலி செய்துகொண்டுப்போகும் ஜனங் களினிமித்தம் நமது கம்மம் பணித்தள எதிர்கால ஊழியங்களுக்காக; புதிதாக தபா மற்றும் இர்பனார் ஆகிய இடங்களில் திறக்கப்பட்டுள்ள வெளிசந்திப்பு ஊழிய மையங்களில் திரளான ஆத்தும அறுவடை பெருக; நமது ஆலயங்கள் யாவும் சுயேட்சையாக இயங்க; பணித்தளங்களில் வாழும் ராஜ் கோண்ட் இன மக்களிடம் ஊழியம் செய்ய நல்ல அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்கள் கிடைக்க; கத்தேட்காசா மற்றும் பாக்யா நகர் கிராமங்களில் நடைபெறும் ஆலயக்கட்டுமானப்பணிகள் விரைவாக நிறைவடைய; சுற்றுச்சுவர், இரண்டு அறைகள், குளியலறை மற்றும் கழிவறை போன்ற அடிப்படை வசதி களுடன் கூடிய ஆலயம் சார்ந்த பயிற்சி மையமொன்று எட்டப்பள்ளி பணித்தள பந்தேவாகியில் கட்டப்பட ஜெபிப்போம்.

## காண்ட் பாரா:
### பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி

**துதிக்க:** புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். மௌலிபாடா கிராமத்தில் நடைபெற்ற முக்கிய தலைவர்கள் கூடுகையை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். இப்பணித்தளத்தில் மேலும் 6 குடும்பங்களைக் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைக்க தேவன் கிருபை ஈந்தார். நமது விசுவாசிகள் தங்களது விவசாயப்பணிகளைத் துவக்குவதற்கேற்ற ஆசீர்வாத மழையை தேவன் கட்டளை யிட்டருளினார். நமது விசுவாசி ஸ்ரவன் பாயிற்கு தேவன் குழந்தை பாக்கியத்தைத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது கூடுகைகளில் வந்து தவறாமல் கலந்து கொண்டிருக்கின்ற ரஜூலா, சரளா, ஈஸ்வர், சுனில் ஆகியோரின் குடும்பத்தினர் யாவரும் இரட்சிக்கப்பட; நமது விசுவாசிகளான நிம்பாபேனைச் சரீர வீக்கத்திலிருந்தும், சாந்திபேனை மரபணு இரத்தக்கோளாறிலிருந்தும், வீருபேனைச் சரீரக்கட்டியிலிருந்தும், வந்தனாபேனைக் கழுத்து நரம்புப் பிரச்சனையிலிருந்தும் சுகமாக்க; வன்ஜாலா மற்றும் கோல்ஹார் கிராமங்களில் நடக்கவிருக்கும் வெளி சந்திப்பு ஊழியங்களின் ஆசீர்வாதங் களுக்காக ஜெபிப்போம்.

## ஆகஸ்ட் 28 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எட்வர்ட் ஜெபசிங்

திருமதி. வசாவே சுனிதா வெச்யா

### மொல்கி, நர்மதா & வத்ஃபாலி:

**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** புதிதாக 17 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் வந்துள்ளனர். நமது எல்லாத் திருச்சபைகளிலும் மீண்டும் ஆராதனைகள் தேவகிருபையால் தொடங்கப்பட்டுள்ளன. 13 இடங்களில் நடத்தப்பட்ட மாலைநேர ஆவிக்குரிய கூட்டங்களை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்யக் காத்திருக்கும் நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; மூஜாபாடா மற்றும் சம்பார் திருச்சபைகளின் ஊழியங்களை எதிர்க்கும் அர்ஷி மற்றும் கைலாஷ் மனந்திரும்ப; தனது முதுகெலும்பில் பெரிய கட்டியோடு கஷ்டப்படும் சிறிய குழந்தை ஐஸ்வர்யாவின் அற்புத சுகத்திற்காக ஜெபிப்போம்.

### சிந்கேடா துணை -வடாலி:

**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** கடந்த மாதம் ஒவ்வொரு வாரமும் நான்கு இடங்களில் ஆராதனை கூட்டங்கள் நடத்தப்பட்டன. பல்வேறு வியாதிகளிலிருந்து நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் அனைவரும் சுகமாக்கப்பட்டனர். நர்தானா பகுதியிலுள்ள புலம்பெயரும் விசுவாசிகள் சுகபத்திரமாகத் தங்களது சொந்த இருப்பிடங்களுக்கு வந்து சேர தேவன் ஈந்திருக்கும் கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிரமமாக விசுவாசிகள் மத்தியில் ஆராதனை மற்றும் உபவாச ஜெபக் கூடுகைகள் நடத்தத் தீர்மானித்திருக்கும் திட்டத்தில் தேவாசீர்வாதம் தங்கியிருக்க; பர்ஜாத் கிராம ஜீவன்தாஸ் குடிப்பழக்கத்திலிருந்தும், கேஷர்பாய், சாகுபாய் மற்றும் பானுதாஸ் தீயப்பழக்க வழக்கங்களிலிருந்தும் மீள; சாகுபாய் நெஞ்சு வலியிலிருந்தும், சங்கர் கடுமையான கால் வலியிலிருந்தும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

### சுர்கானா:

**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** சிரத்தா மற்றும் சுக்காபூர் கிராமங்களிலிருந்து புதிதாக 42 நபர்கள் கிறிஸ்துவின் சிலுவையடிவாரத்திற்கு வந்து சேர்ந்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. போரிகௌதா கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணி தொடங்கப்பட்டுள்ளது. கருந்தாரி, சொங்கிர், தோபல் பாடா, பிலுக் பாடா, பங்காரிபாரி ஆகிய கிராமங்களில் அநேகர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றனர். சுக்காபூர் கிராம பரத் சிங்கர்தியை மனநோய்ச் சம்பந்தப்பட்ட பிரச்சனையிலிருந்து கர்த்தர் விடுவித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்கவிருக்கும் கூடுகைகளில் அநேகர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருப்பதினால், அக்கூடுகைகளை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிக்க; பல்வேறு கோணங்களில் நமது ஊழியத்தைத் தடை செய்யும் கெலிபாடா கிராம சாந்தி மனம் மாற; கெலிபாடா கிராம யஷோதாவைத் தொண்டை தொற்றிலிருந்தும், மன்தா கிராம கேசாவை இரத்த வாந்தியிலிருந்தும் தேவன் குணப்படுத்த; விசுவாசி சுரேஷ் கங்குர்தியின் குடும்பத்தில் மழலை பாக்கியம் அருளப்பட ஜெபிப்போம்.

ஆகஸ்ட்

29

ஞாயிறு

### தர்ணி:

**டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி**

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். நமது புதிய விசுவாசியொருவரின் ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு, அவரது மரிக்கக்கிடந்த எருதை மீண்டும் தேவன் உயிர்பிழைக்கச் செய்தார். இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தங்களது தலைகளில் விழுமாறு கீழே விழுந்த தகரக்கூரை விபத்தினின்று தேவன் நமது மிஷனெரி குடும்பத்தை அற்புதமாகப் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுசிலாவின் மரணத்தினால் மனவேதனையில் மூழ்கியிருக்கும் அவரது குடும்ப மக்களின் மனஆறுதலுக்காக; தொக்கர்மால் கிராம ஆராதனைகளில் சரியாகப் பங்குப் பெறாதபடி பின்மாற்றமடைந்து கொண்டிருக்கும் நமது விசுவாசிகளுக்காக; குடும்பத்தில் ஏற்படும் விரும்பத்தகாத சூழ்நிலைகளினிமித்தம் சோர்ந்து போயிருக்கும் நமது புதிய தொடர்பாளர் ருத்திகாவின் ஆவிக்குரிய ஜீவியம் பெலப்பட ஜெபிப்போம்.

## கர்நாடகா

### ஹுப்ளி பிராந்தியம்:

**சுனில் தத்தகாரா & மீனாக்கி**

**துதிக்க:** புதிதாக இருநபர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களது விசுவாச கண்களால் காணத் தொடங்கியுள்ளனர். ஷிறஹட்டி பணித்தள சாவித்திரிக்கு மழலை பாக்கியம் கிடைத்துள்ளது. கஜேந்திரகடா பணித்தள ஸ்ரீனிவாசா, சிவப்பா, வள்ளப்பா மற்றும் தாங்லால் ஜெள, லூபின் முர்மு, பசவராஜ் மற்றும் அவரது மனைவி சுனிதா, நமது உள்ளூர் சுதேச ஊழியர் சிக்கப்பா ஆகியோர் கோவிட்-19னிலிருந்து சுகம் பெற்றுள்ளனர். முண்டகாட் பணித்தள அங்கிதாவை மனக் கோளாறிலிருந்தும், கான்பூர் கிராம வினய்ராஜை சுயநினைவின்மையிலிருந்தும் தேவன் நமது ஊழியர்களின் ஜெபம் கேட்டு அற்புதமாகச் சுகப்படுத்தியுள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிரிஸ்யால், ராமாபூர், திமார்பூர், சிக் கோல்பல்லா ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் உருவாக்கத் திட்டமிட்டிருந்த காரியங்களில் தேவாசீர்வாதம் உடனிருக்க; வெளிசந்திப்பு ஊழியங்களில் உற்சாகமாக ஈடுபடும் நிடகுந்தி பணித்தள நமது புதிய விசுவாசி சங்கரம்மாவிற்காக; கிறிஸ்தவ முறையில் திருமணம் செய்து கொண்டதால், உறவினர்களால் பெரும் இன்னலுக்கு ஏதுவாகும் நமது விசுவாசி சுரேஷிற்காக; நமது ஷிறஹட்டி பணித்தள கோலிவாடா சபை மூப்பர் விம்மண்ணாவின் மறைவினால் துயரத்திலிருக்கும் அவரது குடும்ப மக்களின் மனங்கள் தேவ ஆறுதல் பெற ஜெபிப்போம்.

ஆகஸ்ட்
**30**
திங்கள்

# தெலங்கானா

## அசிஃபாபாத்:

**வசாவா ரமேஷ்பாய் & சுனிதாபேன்**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. பர்திகுவா கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட்டுள்ளது. சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து மகேஷையும், ஆஸ்துமா வியாதியிலிருந்து நனு பாயையும், நீர்த்திரவக்கூழ் (hydrosol) பிரச்சனையிலிருந்து திருப்பதியையும் தேவன் அற்புதமாகக் குணப்படுத்தி யதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நம்பிக்கையின்றி மரணப் படுக்கையில் கிடக்கும் ஜோதியின் இரட்சிப்பிற்காக; சமூக தீயப்பழக்கங் களிலிருந்து கோண்ட்ஸ் இனமக்கள் விடுதலை பெற; கணேஷ், சுவாய், நாராயன், ஆனந்த், சஞ்ஜய் ஆகியோர் குடிப்பழக்கத்தை விட்டு மனந்திரும்ப ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

## தாமலச்செருவு:

**பிரசாந்த் மீசலா & ரூபா குமாரி**

**துதிக்க:** குஜுலாபள்ளி கிராமத்தி லிருந்து ஒரு குடும்பம் சுவிசேஷத்திற்கு ஆர்வம் தெரிவிக்கின்றனர். அரிஹள்ளி, ஜோகிவாரிபள்ளி, நரவாரிபள்ளி, V. கோத்தூர், வள்ளியகட்லா ஆகிய கிராமங்களில் வேதாகம வகுப்புகள் கைபேசி கூட்டிணைப்பு அழைப்பு வசதிகள் மூலம் நடத்தப்பட்டன. நமது விசுவாசிகளான எர்ராபள்ளி கிராம கோவிந்தையா என்ற ஆபிரகாம், கலிகிரிபள்ளி கிராம உமாபதி, V. கோத்தூர் பகுதி நாகபூசணம், யாதமரி கிராம சாம் சாகர் மற்றும் பானுவின் குடும்பங்கள் அனைத்தையும் பல்வேறு நோய்களினின்று தேவன் பாதுகாத்தார். விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள், உள்ளூர் சுதேச ஊழியர்கள் கூடுகை, ஆலய சபை மூப்பர்கள் கூடுகை யாவையும் பலவிதங்களில் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இத்தொற்றுநோயின் பயமின்றி நமது விசுவாசிகள் யாவரும் ஐக்கியக்கூடுகைகளில் பங்குப்பெற; இனிவரும் நாட்களில் நடக்கவுள்ள சபை மூப்பர்கள், பெண்கள், வாலி பர்கள், சிறுவர்கள் பயிற்சிக்கூடுகைகள் யாவற்றிலும் தேவாசீர்வாதம் தங்கி யிருக்க; வெளிசந்திப்பு, பிரதான வெளிசந்திப்பு, இரவுநேர ஜெபக் கூட்டங்கள் யாவும் தடையின்றி நடை பெற; நமது புதிய தொடர்பாளர்களான கவிதாவின் குடும்பம், கல்பனா, சுபரத்னம், ஜோதி ஆகியோர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் தைரிய மாக அறிக்கையிட; தனது தாய் மரியம் மாவை இழந்திருக்கும் மூரணாபள்ளி கிராம ஆபிரகாமின் குடும்பத்தில் தேவ ஆறுதல் ஊற்றப்பட ஜெபிப்போம்.

ஆகஸ்ட்

31

செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கிறிஸ்டோபர் P.G., திரு. பாலாஜி ஏசுதாஸன்
திரு. ரஞ்ஜன் காஸலா

## புலிவேந்துலா:
### விஜய் குமார் & சுஷீலா

**துதிக்க:** இரண்டு இடங்களில் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடை பெற்று வருகின்றன. ஊரடங்கிற்குப்பின் கிராமங்களுக்குச் சென்று மக்களை முகமுகமாய்ச் சந்திக்க தேவன் தந்த கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எய்ட்ஸ் வியாதியினால் அவதியுறும் விஜயகுமாரிக்குப் பூரண சுகம் கிடைக்க; நமது விசுவாசிகளுடைய பிள்ளைகளின் கல்விப்படிப்பிற்காக ஜெபிப்போம்.

## வி. கொட்டா:
### சஞ்சய் குமார் பீரோ & சகரிகா

**துதிக்க:** ஊரடங்கினிமித்தம் வேதாகம வகுப்புகள் மற்றும் ஜெபங்களைக் கைபேசி கூட்டிணைப்பு அழைப்பு வசதிகள் மூலம் நடத்த தேவன் ஒத்தாசை புரிந்தார். இத்தொற்றுநோய்க் காலங்களில் நமது விசுவாசிகள் அதிக ஆவிக்குரிய ஊக்கம் பெற்றனர். தற்போது திருச்சபைகள் யாவிலும் ஆராதனைகள் தொடங்கப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வி. கொட்டா பகுதி நமது விசுவாசி சுதாவைக் கோவிட்-19 னிலிருந்து தேவன் குணமாக்க; நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்குக் கிறிஸ்தவ குடும்பங்களிலிருந்து திருமண சம்பந்தங்கள் கிடைக்க; தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்யக் காத்திருக்கும் நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## கலக்கடா: வேடியப்பன் & லக்ஷ்மி

**துதிக்க:** கனலபள்ளி கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் பகிரப்பட்டுள்ளது. நாகராஜாவும் சுஜாதாவும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள தேவன் பாராட்டிய அளவில்லாத அவர் தம் கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கதிராயச்செருவு பகுதியில் ஆலயம் கட்டுவதற்கு இருக்கும் தடைகள் அகல; கோத்தபள்ளி கிராம நமது விசுவாசி வெங்கடரமணாவின் நிலப்பிரச்சனை சுமூகமான தீர்வுக்கு வர ஜெபிப்போம்.

## அன்று போல இன்றும்!

*மத்தியப்பிரதேசம், கால்வா பணித்தளம். சிக்காலி கிராமத்தில் ஒருநாள் மாலைநேர ஜெபக் கூடுகையில் தேவ வல்லமை வெளிப்பட்டது. 100 நபர்கள் மாத்திரமே பங்குப்பெறுமாறு அக்கூடுகை ஒழுங்குச் செய்யப்பட்டிருந்தது. ஆனால், அன்று சற்றும் எதிர்பாராதவிதமாக அக்கூடுகையில் 280 பேர் கலந்து கொண்டு, தேவ வார்த்தையை மிக உற்சாகத்துடன் கேட்டனர். சத்துரு அக்கூடுகையை தடுத்து நிறுத்த இடையில் மின்சார தடையை ஏற்படுத்தியபோதும், நமது ஊழியர்கள் மின் ஆக்கியைப் (generator) பயன்படுத்தி அக்கூடுகையை அமோகமாக நடத்தி முடிக்க தேவன் கிருபை ஈந்தார். பலரது உள்ளங்கள் தேவனால் தொடப்பட்டதால், அவ்விடத்திலேயே 21 பேர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டனர். பின்னர் வெறும் 100 பேருக்கென ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த இரவு உணவுப்பந்தியில் 280 பேரும் அமர்ந்தனர், ஜெபத்துடன் பந்தி துவங்கியது. என்ன அதிசயம்! வேதத்தில் அன்று சொல்லப்பட்டுள்ளபடி 5 அப்பம் 2 மீன்களைக் கொண்டு 5000 பேரைப் போஷித்த கர்த்தரின் வல்லமை, இந்த நாளிலும் சிறிதும் குறைவின்றி 280 பேரும் வயிறார உணவருந்துவதற்குப் போதுமானதாக வெளிப்பட்டதை அக்கூடுகையில் கலந்து கொண்ட அனைவரும் உணர்ந்தனர். அல்லேலூயா!*



# ஊழியர் குடும்பநல நிவாரண நிதி (FBF) ஆதரிக்க முன்வாருங்கள்!!!

*"...உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக ... வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்." – பிலிப்பியர் 4:18*

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களுக்காய் அனுதினமும் பாரத்தோடு ஜெபித்து, கரிசனையோடு உதாரத்துவமாய்க் கொடுத்துவரும் உங்களுக்காக நன்றி நிறைந்த இருதயத்தோடு தேவனைத் துதிக்கிறோம். ஊழியர்களின் மருத்துவ நிதித் திட்டத்தைப் பகிர்ந்துகொண்டபோது உங்களில் அநேகர் உற்சாகமாகக் கொடுத்து உதவினீர்கள். தேவன்தாமே உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! இப்போதும் ஊழியர் குடும்பநல நிவாரண நிதித்தேவையைப் பற்றி இந்தப் பத்திரிகை வாயிலாக பகிர்ந்துகொள்ள தேவன் தந்த வாய்ப்பிற்காக தேவனைத் துதிக்கிறோம்.

ஊழியர் குடும்பநல நிவாரண நிதித் திட்டத்தை ஆரம்பித்து மாதந்தோறும் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து ரூ.50/– பிடித்தம் செய்து வங்கியில் சேகரித்து வருகிறோம். ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை வழங்குகிறோம். மேலும் நமது ஊழியர்கள் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டோ அல்லது விபத்தில் சிக்கியோ மரிக்கும்போது, அந்தக் குடும்பத்திற்கு ஊழியர் குடும்பநல நிவாரண நிதித் திட்டத்திலிருந்து ரூ.1,00,000/– கடந்த ஆண்டு வரை வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுதுள்ள காலச் சூழ்நிலைகள் மற்றும் பொருளாதார நிலைமையைக் கருத்தில்கொண்டு, கடந்த மாதம் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், ஓர் ஊழியர் பணியில் இருக்கும்போது மரித்தால் அவர் குடும்பத்திற்கு ரூ.2,00,000/– என்றும், ஓய்வு பெற்றபின் மரித்தால் அவர் குடும்பத்திற்கு ரூ.1,00,000/– என்றும், தன்னார்வ ஊழியர் மற்றும் சுதேச ஊழியர் மரித்தால் அவர்கள் குடும்பத்திற்குத் தலா ரூ.50,000/– என்றும் வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பணியிலிருந்த நமது ஊழியர்கள் ஏழுபேரும், ஓய்வு பெற்ற ஊழியர்கள் இரண்டு பேரும், தன்னார்வ ஊழியர் ஒருவரும், சுதேச ஊழியர்கள் ஐந்து பேரும் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு கர்த்தருடைய பரம இராஜ்யம் சென்றுள்ளனர். ஆகவே ஊழியர்களுக்குக் குடும்பநல நிவாரண நிதி வழங்கும் தேவை அதிகரித்துள்ளதாலும், வங்கி சேமிப்பிலுள்ள பணம் ஊழியர்கள் ஓய்வு பெறும்போது வழங்கப்பட்டு விடுவதாலும் ஊழியர்கள் மரிக்கும்போது அவர்கள் குடும்பத்திற்குக் கொடுப்பதற்கு இத்திட்டத்தில் நிதிப் பற்றாக்குறை நிலவுகிறது. ஆகவே இதை வாசிக்கும் உங்களோடு ஆண்டவர் இடைபடுவாரானால், ஊழியர் குடும்பநல நிவாரண நிதித் திட்டத்திற்கென்று உதாரத்துவமான உங்கள் காணிக்கைகளை வழங்கி மரித்த ஊழியர்களின் குடும்பங்களுக்கு உதவுமாறு பட்சமாய்க் கேட்கிறோம்.

மேலும் ஊழியர்களின் சரீர சுகத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள். தங்களுக்கு அன்பான துணையை இழந்திருக்கும் ஊழியர்களையும், அவர்கள் பிள்ளைகளையும் தேவன்தாமே ஆறுதல்படுத்தவும், அவர்கள் எதிர்காலத்தை ஆண்டவர் பொறுப்பெடுத்துக்கொள்ளவும் ஜெபியுங்கள்.

**மேலும் கூடுதல் விபரமறிய விரும்பினால் உங்கள் அருகில் வாழும் முன்னேற்றப்பணி செயலரையோ, கௌரவ முன்னேற்றப்பணி செயலரையோ அல்லது ஜெபக்குழுத் தலைவர்களையோ தொடர்பு கொள்ள பட்சமாய்க் கேட்டுகிறோம்.** – நிதித்துறை

Regd. Newspaper for India No.17759/69

# Tender Notifications - Calendar 2022

**FRIENDS MISSIONARY PRAYER BAND** invites sealed tender for printing of two lakhs calendars approximately in various languages for the year 2022.

## Calendar Specifications

| | | |
|---|---|---|
| **A.** | Size of calendar | 22" X 17" |
| **B.** | Paper Quality | 130 gsm real art paper (Synormous) |
| **C.** | Colour | Four Colours with white background |
| **D.** | No of pages | 6 sheets Front and back |
| **E.** | Tin Mounting | 5 mm |

## Conditions:

1. The printer should have minimum 10 years' experience in calendar colour printing of not less than 2 lakhs per year and possesing CPC MACHINE.
2. Time Frame: Printer should ensure the completion of work within 30 days from the date of awarding of the work order.
3. Packing should be made in 10 numbers of calendar in each bundle.
4. Earnest Money Deposit: Rs.1,00,000/-

## Tender Programme

Supply of Tender document upto 16.08.2021 upto 5pm
Date of submission upto 31.08.2021, upto 5pm
Date of opening on 02.09.2021, 11am

Tender documents (free of cost) can be obtained in person or by post from the Secretary Communication, FMPB, 29, High School Road, Ambattur, Chennai - 53. After submitting documents proof for having 10 years of experience in calendar (colour) printing.

# Quotations for Diary and Planner

We invite quotations for supplying 3000 diaries and 17,000 pocket size monthly planners for the year 2022.

| | |
|---|---|
| Size of the planner | 6 x 3.5 inches (Rexine type) |
| Pages of the planner | 216 pages |
| Size of the diary | 8.5 x 5.5 inches |
| Pages of the diary | 532 pages |

Please send your samples along with quotations in sealed envelope on or before 31.08.2021 to the Calendar Committee, FMPB, 29, High School Road, Ambattur, Chennai - 600053. Phone: 044-26570404

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***